# தென்மொழி

## ஆகுமோ உலகு, அவள் அழிவிலாப் புகழ்க்கே ?

மானமும் உயிரும் வாழ்வும் கருதி
வானமும் நிலமும் நீரும் கடந்து
கானமும் புகுந்து களத்தினும் நெரிந்து
தானும் குடும்பும் இனமும் இடர்ப்பட
ஆயிரம் ஆயிரம் இளையரும் பெண்டிரும்
மாய்வதும் திரிவதும் ஆகிய நிலைகொள்
ஈழத் தமிழர் இடையினில் தோன்றிக்
காழ்த்த நெஞ்சின் கன்னி இளமுகை-
தன்னையும் இழந்து தமரையும் இழந்த
அன்னைக் குலத்தோர் அறங்கூர் மறத்தி-
தானுவென் பெயரினள் தன்னினம் அழித்த
வீணனுக் கெதிரா வெகுண்ட வெஞ்சினம்
நெஞ்சினும் உயிரினும் நிலைத்த நினைவொடு
ஒருதனி நின்றே ஊர்நடு சிதைத்த
ஈக மன்றோ ஈகம்
ஆகுமோ உலகவள் அழிவிலாப் புகழ்க்கே !

திணை : மூதின்முல்லை   துறை : அறங்கூர் மறம்

(இப் பாடல் நூறாசிரியத்துள் 66-ஆம் பாடலாக முகிழ்த்துள்ளது. உரை அடுத்த இதழில்)

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

வடி : 26
லை : 4
லை:
உருபா : 3-00

# நமக்கு வந்த மடல்கள்.

O: 1472: மானமிகு திரு. பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். தங்களின், இட்ட சாவம் முட்டியது ஆசிரியவுரைக் கட்டுரை சிந்திக்கத் தெரிந்த ஒவ்வோர் உண்மைத் தமிழனின் உள்ளத்து உணர்வுகளாகும். இலண்டனில் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின் தமிழீழத்தைச் சேர்ந்த தளபதி கிட்டுவைக் கூட ''தங்களை ஏன் வெளியேற்றக் கூடாது'' என வினவி அதன் பின் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தது பிரிட்டிசு அரசு. ஆயின் தமிழக அரசோ, தமிழன் தமிழனுக்கு உதவினுலோ, தமிழீழத்தைப் பற்றிப் பேசினுலோ, தமிழின உணர்வு உள்ளோர், தமிழீழ மாநாடு நடத்த முற்பட்டாலோ அல்லது சுவரொட்டிகளில் தங்களுணர்வுகளைத் தெரிவித்தாலோ, ''தேசப்பகைச் (விரோதச்) செயல்'' எனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறைசெய்வது வியப்பினும் வியப்பே! இன்னும் கருநாடக அரசே அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

அதுமட்டுமன்று, அண்டை மாநிலமான கருநாடகம் (நான் வாழும் மாநிலம்) காவிரி தமிழகத்தில் பூவிரிப்பதைத் தடுத்துத் தீவிரித்ததோடு நிற்காமல், தாம் தமிழன் என்று எங்கும் அறிமுகப்படுத்திக் கொள்ளாமலும், தமது ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்களிலும் ஒன்றில் கூட தமிழ் என்ற சொல் கூட இடம் பெறுமலும் உலகப் பொதுமறை தந்த பொதுப் புலவர் திருவள்ளுவர் திருவுருவச்சிலைதனை வெங்காலூர் தமிழ்ச் சங்கம் நிறுவ முயன்றதைத் தடுத்ததோடு நிற்காமல், தான் கொடுத்த இசைவையும் திரும்பப் பெற்றுக் கொண்டது, வெங்காலூர் மாநகராட்சி, என்பது—அவலத்திலும் அவலம்! இதனைத் தமிழன் முதல்கொண்டு ஆரியன் அடுத்து அனைவரும் இந்தியர் எனத் 'தேசியம் பேசுவோர்' கண்டு கொள்ளாததையும் கண்டிக்காததையும் என்னவென்று சொல்வது?

இனி, கேட்போர் எவருமில்லை என்ற இறுமாப்பில் முரட்டுத்தனமாக, நீர்வழி, நிலவழி, வான்வழிகளில் வரைமுறையின்றி ஈழத் தமிழன் மேல் இனத் தாக்குதல்கள் இலங்கையிலே! அடுத்து இலண்டன் முதல் கொண்டு பிற நாடுகளிலோ தமிழனை நாடு கடத்தல்! இதற்கெல்லாம் உச்சக் கட்டம் போல் எந்தப் பார்ப்பனீயத்தை—பார்த்தீனியத்தை—ஒழிக்கச் சொல்லி ஓயாதுழைத்தாரோ, அந்தப் பெரியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டும் எந்தத் திராவிடர் (திராவிடர் எனின் இன்றைய நிலையில் தமிழரையே குறிக்கும்) முன்னேற்றத்திற்காக அண்ணு கழகம் தொடங்கினுரோ அந்த அண்ணுவின் பெயரைச் சொல்லிக் கொண்டு, தமிழகத்தில் ஒரு பார்ப்பனத்தியின் ஆட்சி! பாலுக்குப் பூனை காவல் போல், பழந்தமிழனுக்குப் பார்ப்பனத்தி காவல்!

இத்தோடு நிற்காமல், சில அடிவருடிகளும் தகுதியற்றதுகளும், அத்தலைவியைப் பெருமைப் படுத்த, ''அண்ணு அன்பு காட்டினுர். பெரியார் பெருமைப் படுத்தினுர்.'' என ஒத்தடம் கொடுத்தல் கேட்டிலும் மானக்கேடு. உண்மையில் இன்று

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

# இவர்களில் நானுமா ஒருவன் ?

எடுப்பு

இவர்களில் நானுமா ஒருவன் ?
இழிவு ! மிக இழிவு !
சுவர்களில் இதுவுமோ குட்டிச்
சுவர்எனக் கூறுதல்போல்— (இவர்களில்)

தொடுப்பு

துவர்முகம், எரிப்புவிழி, உவர்ப்புரை,
கசப்புளம், புளிப்புநடை,
கவர்வுசெய் இனிப்புநகை—எனவே
திரிந்திடும் கயமையராம்— (இவர்களில்)

முடிப்பு

எதற்குநாம் பிறந்தோம், எதற்குநாம்
வாழ்வோம் எனநினையாப்
பதர்க்கிணை யானவர் பலபடப்
பேசுவார், பழிநினையார்— (இவர்களில்)

அன்பிலே போலியர் ; அறிவிலே
மூளியர் ; ஆசைகளைத்
துன்பிலே துவட்டித் தொழுவிலே
கட்டிய தொழும்பர்களாம்— (இவர்களில்)

வாயிலே சர்க்கரை ! கையிலே
தொக்கரை ! வழிப்பறிக்கும்
நோயிலே உழன்று கழிசடை
நீரிலே நொதிந்தழியும்— (இவர்களில்)

முன்னும் நினையார் ! பின்னும்
உணரார் ! முங்கிமுங்கித்
தின்னும் வயிறொடும் உடுத்தும்
உடலொடும் திரிபவரே— (இவர்களில்)

மன்னும் சீரறி யார், பொதி
மலைச்சதைக் கொழுப்புஒளிச்
சின்னஞ் சிறியர் ; சீழ்வடி
நெஞ்சக் கிறுக்கரிவர்— (இவர்களில்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் முழக்க, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். தொலைபேசி: (847829)

[சுவடி: 26] தி பி. உ0உ௩ — சுறவம் (சன 92) [ஓலை:4)



# இராசீவின் இறுதி! இட்டசாவம் முட்டியது-4

நிலைகள் இவ்விவ்வாறு, தமிழின முன்னேற்றத்திற்கும் உரிமை மீட்புக்கும் எதிரானவையாக இருப்பதை நாம் மறந்து விடவோ மறுத்து விடவோ முடியாது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இப்பெருந் தமிழினத்துள், திருவள்ளுவப் பேராசான் கண்ட 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்' இன்னும் மறைந்தபாடில்லை.

தந்தை பெரியாரின் தன்மானத் தமிழுரிமை மீட்புத் தனிநாட்டுப் பெருங்கொள்கையும், புரட்சிப் பாவேந்தரின் அருந்தமிழாட்சியின் இரும்பேரிலக்கணக் கோட்பாடாகிய 'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்' 'தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ் நாட்டில் வாராது தடுத்தல் வேண்டும்!' எனும் கனவு வரிகளும், "ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவும்" தொலைநோக்குப் போராட்டப் பார்வையும் என்னவாயின? எவருடைய நினைவில் இன்னும் எண்ணத்திரட்சியாக உள்ளன? எப்படியும் காலம் தானாகவே கனியப்போவதில்லை.

இந் நிலையில், இற்றை இளைஞர்கள் சிலர், தமிழீழ உரிமை வெடிப்புகளைக் கண்டு, இங்கும் தமிழின உரிமைப் போராட்டம் ஒன்று உருப்பெறுதா என்னும் ஏக்கத்தில் காலத்தையும் இடத்தையும், நாட்டு நிலைகளையும் கூர்த்து நோக்கியவாறு இருப்பதையும் நாம் உணர முடிகிறது. இவ் விளைஞர்களுடன் தோளொடு தோளாக இருந்து இயங்க வேண்டிய மாணவர் கூட்டமோ, வெறும் வீணவர் கூட்டமாக, வெள்ளித் திரையில் நடக்கும் வேடிக்கைச் சண்டைகளைப் பார்த்து, வெறும் வாயைக் குதப்பிச் சுரக்கின்ற எச்சிலுடன், தங்கள் வீர உணர்வுகளையும் விழுங்கி, உணர்வு எழுச்சிகளையும் ஆற்றிக் கொள்கின்றனர். அடுத்து, ஊழல் மலிந்ததும், உலுத்தர்கள் நிரம்பியதும், அரம்ப மாக்கள் நிரம்பப் பொருள் இரைத்துத் திறம் பெறுது உள்ளம் இழிந்ததும், வரம்பிலாக் கயமை நிறைந்ததுமான இக்கால அரசியல் ஒப்போலைக் களங்களை நம்பியும் தேசிய இன விடுதலையைத் தமிழினம் பெற்றுவிட முடியாது; அந்த முயற்சியைத் தள்ளிப் போடவும் முடியாது.

எனவே, உண்மையான தமிழின மறுமலர்ச்சிக்கும், உரிமை மீட்புக்கும், முழு இறையாண்மை பெற்ற தன்னுரிமைத் தமிழ்நாட்டு அமைப்பிற்குமாக, உள்முனைப்பும் உறுதிவேகமும் கொண்டு, இற்றைச் சூழ்நிலைகளை முறியடித்து, வெற்றிப் பாதையை உருவாக்கிக் கொடுக்கும் பொதுமக்கள் புரட்சி ஒன்றே கால் கொண்டு எழுச்சி பெறுதல் வேண்டும். ஆனால் அடிமை உணர்வும், சாதி, மத வெறியுணர்வுகளும், அறியாமையும், ஏழ்மையும் நிறைந்த இன்றைய பொதுமக்களிடம் இவ்வினப் புரட்சி கால் கொள்ளுமா, எழுச்சி பெறுமா என்பதும் ஓர் ஐயமே.

இனி, இதற்கு நேர் மறுதலையானதும், இளைஞர்கள் சிலரின் உள்ளத்தே முகிழ்த்து வருவதுமான கருவிப் புரட்சி என்பது, உலகின் இன்றைய வரலாற்று வளர்ச்சி நிலைகளுக்கும், போர் அறிவியல் வளர்ச்சி முதிர்வுகளுக்கும் பொருந்தி வரும் என்று நினைப்பதற்கு இயலவில்லை. இளைஞர்களின் கைகளில் கிடைக்கும் கருவிகளை விடப் பன்மடங்கு புதினமும் வலிவும், மிகுதியுமான கருவிகள் ஆட்சியதிகாரக்காரர்களின் கைகளில் கிடைக்க வாய்ப்புகள் உண்டன்றோ? அதனால் மிகுதியான உயிர் அழிவுகளுக்கும், கால நீட்டிப்புக்குமே இடனுண்டு.

ஆகவே, இராசீவ் போலும் அரசியல் அழிம்பும், வஞ்சகமும், பதவி வெறியும், பகட்டு ஆடம்பரமும் கொண்ட தலைவர்களுக்கும், செயலலிதா போலும் கவர்ச்சியும் கரவும் சூழ்ச்சியும் ஏமாற்றும் பழிவாங்கும் உணர்வும் கொண்ட தலைவர்களுக்கும், நேர் எதிராக மக்களைத் திரட்டிப் புரட்சி செய்வதே மிகச் சரியானதும், வலிவானதுமான ஓர் அணுகுமுறையாகும். இவ்வாறல்லாத இனவுரிமை மீட்புக்கு 'முண்டையின் மகனே' போலும் அறப்பாடல்களை எழுதியே மறப்போர் நிகழ்த்தி விட முடியாது. இம் மெய்யறிவான நிகழ்வுகளில் மாந்தவியல் கோட்-

பாடு முனை மழுங்கிப் போகும்; அறிவியல் மெய்ம்மம் இழுக்குற்றுத் தாழும்; மாந்தர்களிடம் வெறுமையும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் மடிமையும் பகுத்தறிவின்மையும் ஆழக் குடிகொண்டு விடும்.

எனவே, மக்களை எழுச்சியுறச் செய்யும் முயற்சியில் தமிழின முன்னேற்ற உணர்வு நிலை, அறிவு நிலை, கொள்கை நிலை, செயல் நிலைத் தொண்டர்கள் மிக ஆழமாகவும் அகலமாகவும் கவனமும் கருத்தும் கொள்ளுதல் வேண்டும். இவ் விடத்தில் அண்ணல் அம்பேத்கர் மக்களுக்கு அளித்த கற்பி, போராடு, ஒன்றுபடுத்து என்னும் மூன்று முனைப்புணர்வுப் படி நிலைகளையும் சிறிதே மாற்றியமைத்து, கற்பி (Educate), ஒன்றுபடுத்து (Organise), போராடு (Agitate) என்று முறைகொண்டு, செயல் படுத்துதல் வேண்டும்.

மக்களுக்குக் கற்பிப்பது மிக மிக இன்றியமையாதது. கற்பிக்க வேண்டியதில் முகாமையானது கல்வி மட்டுமன்று; நல்லுணர்வும் ஆகும். நல்லுணர்வுதான் விழிப்புணர்வைத்தரும். இவ்வுணர்வைத்தான் இன்றைய அரசியல் கட்சிகள் மக்களுக்கு ஊட்ட விரும்புவதில்லை. ஏனெனில் மக்கள் விழிப்படைந்து விட்டால் தங்களின் ஏமாற்றுகள், சூழ்ச்சிகள், சூதுகள், போலி-யும் பொய்ம்மையும் நிறைந்த கரவான நடவடிக்கைகள் முதலியன அவர்களுக்கு விளங்கி விடுமே, தங்கள் மறைவான நடவடிக்கை-கள் அம்பலமாகிப் போகுமே என்பதால், மக்கள் அறிவும் உணர்வும் பெறுவதை அவர்கள் விரும்புவதில்லை.

இந்திராவும் இராசீவும் மறைந்து போனாலும் இந்திய, தமிழக அரசியல் களங்களில் இன்னும் அவர்களின் ஏமாற்று எத்துகள், அரட்டல் புரட்டல்கள், அரைசல் புரைசல்கள் யாவும் மறைந்து விட வில்லை. இப்பொழுதுள்ள அரசியல்காரர்-கள் சில நிலைகளில் அவர்களைப் போலவும், பல நிலைகளில் அவர்களை விடவும் தில்லு முல்லுகளையும், தமிழின அழிப்புகளையும் செய்து கொண்டுதான் வருகின்றனர்.

தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிய செயலலிதா தமிழினத்தின் மேல் தொடுத்துள்ள வஞ்சகத்தன-மான அழிவுப் போரின் உத்திகள் கொஞ்சநஞ்சமல்ல. தம் அரசியல் எதிரிகளாக அவர் கருதும் கலைஞரையும், அவர் கட்சி யினரையும் பழிவாங்குவதாகக் கலைஞர் உட்பட அனைவரும் கருது-கின்றனர்; குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனால், செயலலிதா தம் ஆட்சியதிகார வன்மையால், தமிழினத்தையே அழித் தொழிக்க உறுதிபூண்டுள்ளார் என்பதே முழு உண்மையாகும். இதை விளங்கிக் கொள்ளாமல், அவரின் அடிவருடிக் கொண்டி-ருக்கும் தமிழின வீடர்களான வீரப்ப, நெடுஞ்செழியப் பொறுக்-கித்தின்னிக்கும்பல் அவருடன் இணைந்து தம் இனநலத்தையே கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக்கொண்டுள்ளது.

கடந்த கால அரசியல் கண்ணோட்டங்களையும், இக்கால அரசியல் நடவடிக்கைகளையும் சரியாக மதிப்பிட்டுச் சொல்வதா-

ஞல், பெரியார் காலத்தைவிட, அண்ணு காலத்தில் பார்ப்பனர்-கள் விழிப்படைந்திருந்தனர். அண்ணு காலத்தை விட, கலைஞர் காலத்திலும், கலைஞர் காலத்தை விட, ம. கோ. இரா. காலத்திலும் அவர்கள், மேலும் விழிப்பும் எழுச்சியும் பெற்றிருந்தனர். இனி ம. கோ. இரா. காலத்தை விட, இன்றைய செயலலிதா காலத்தில் பார்ப்பனர்கள் முனைப்புடனும் முழுத்திறனுடனும், சூழ்ச்சி-யுடனும் இயங்குகின்றனர் என்பதை யாருமே மறுக்க முடியாது.

செயலலிதா பார்ப்பனீயத்தின் ஒரு கொடுமுடி; துக்ளக்'சோ' இன்னொரு கொடுமுடி. அத்வானி, வாச்பாய், போன்றவர்கள் வேருெரு கொடுமுடி; தலைமையமைச்சர் நரசிம்ம-ராவ்போன்றவர்கள்மற்றுமொரு கொடுமுடி. இவர்களைப் போல-வே தினமணி கசுத்தூரிரங்கன் போன்றவர்கள் தமிழையும், தமிழர்களையும் நயவஞ்சகமாக வீழ்த்தும் பெரும் பள்ளத்தாக்குகள். இத்தகைய எதிர்ப்புகள், சூழ்ச்சிகள், நயவஞ்சகங்கள் போன்ற-வற்றின் நடுவில்தான் தமிழர்கள் தம் தம் மொழிக்காகவும், இனத்துக்காகவும், நாட்டிற்காகவும் போராடவும், போரிடவும் வேண்டியுள்ளார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

எனவே, ஓர் இந்திரா, ஓர் இராசீவ் ஒழிந்ததனுலேயே தமிழினம் தான் வெற்றிக்குகந்த சூழ்நிலையை அடைந்துவிட்ட-தாக நாம் கூறிவிட முடியாது. தமிழின எதிரிகள் ஒரு படி வலுப்பெறும் அதே நிலையில், தமிழின இரண்டகர்களும் வீடணர்களும் அதற்கும் மேல் ஒரு படி மிகுந்து நின்று அவர்களுக்குத் துணை போகிருர்கள். செயலலிதா பேசுவதற்கு மேல், நெடுஞ்செழியனும், கிருட்டிணசாமியும், சோமசுந்தரமும், வீரப்பனும், அரங்கநாயகமும் பேசுவதைப் பார்க்கும் பொழுது இவர்களின் உடலில் ஓடுவது தமிழ்க் குருதியா அல்லது பார்ப்பனக் குருதியா என்பது தெரியவில்லை.

செயலலிதா ஆட்சிக்கு வந்ததிலிருந்து அவர் அறிவித்-திருக்கும் செயல் திட்டங்களுக்கு அளவில்லை. ஆனுல், அவற்றுள் செயலுக்கு வந்தவை விரல்விட்டு எண்ணத்தகுந்தவையாகக் கூட இராது என்பதைக் கருத, இத்தமிழின வீடணர்கள் எதைக் கருத்தில் கொண்டு செயலலிதாவை அளவிறந்து பாராட்டு கின்றனரோ நமக்கு விளங்கவில்லை. அவர் ஒவ்வோர் ஊருக்கும் செல்லும் பொழுது பண்ணுகிற ஆரிப்பாட்டமும் அழிம்பும் ஆடம்பரமும் இருக்கின்றனவே, அவை, நாட்டு நலன் கருதும் நன்னெஞ்சங்களுக்குப் பொறுத்துக் கொள்ள இயலாத துன்பத்-தைத் தருவனவாகும்.

இனி, எல்லாவற்றுக்கும் மேலாக, செயலலிதாவும், பங்காரப்பாவும், நரசிம்மராவும் அரசியல், அதிகாரம், ஆட்சி என்னும் பெயரால், காவிரி நீர்ச் சிக்கலை இனச்சிக்கலாக மாற்றிக் கருநாடகத்தில் தமிழர்களை அழித்தொழிக்கும் கொடுமைகளுக்கு அளவே இல்லை. இக்கொடுமைகளை எதிர்த்துத் தமிழகத் தமிழர்-கள் குரல் கொடுப்பதைத் திசை திருப்புவதற்கு என கருநாடகத்

தமிழர்களுக்கு இழப்பீடுகள், ஏதிலியர் காப்பகங்கள், உதவித் தொகைகள், உணவுப் பொருள்கள், துணிமணிகள் முதலியவை தருவது போலும் அறிவிப்புகள் மாநில அரசிலிருந்தும், நடுவண் அரசிலிருந்தும் அன்றாடம் வெளிவருகின்றன.

கருநாடகத் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்; வெளிப்படையாக வெட்டப்படுகின்றனர்; வீடுகள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன; பொருள்கள் கோடிக் கணக்கில் கொள்ளை-யடிக்கப்படுகின்றன; சூறையாடப்பெறுகின்றன; பெண்கள் நட்ட நடுச் சாலையில் கற்பழிக்கப் படுகின்றனர்; சேலைகளை அவிழ்த்துக் கொண்டு ஓட ஓட விரட்டியடிக்கப் படுகின்றனர்; குழந்தைகள் எரிகின்ற நெருப்பில் தூக்கி எறியப்படுகின்றன; —இத்தனையும் இந்திய ஒருமைப் பாட்டு எல்லைக்குள், பாரத கலை, பண்பாடு, நாகரிகம் பேசும் மடயர்களின் ஆட்சி வரம்புக்குள் நடைபெறுகின்றன. இவற்றைத் தடுக்கவோ அடக்கவோ, குற்றவாளிகளைத் தண்டிக்கவோ, நடுவணரசை ஆட்சி செய்யும் பேடிகளால் முடியவில்லை; இதைக் கண்டிக்கவோ எதிர்த்துக் குரல் கொடுக்கவோ மாநிலத் திருடர்களின் ஆட்சிகளால் முடிய-வில்லை; ஆனால் தமிழர்களுக்கு ஏற்பட்ட சேதங்களையும் இழப்பு-களையும் மதிப்பிட்டு இழப்பீடு தருவோம் என்று பெட்டைப் பெருமையாக அறிவிக்கின்றனர். இவ் வெட்கங் கெட்ட வீணர்-களை நம்பியிருப்பதை விட, அவர்களின் ஆளுகைக்கு உட்பட்டி-ருப்பதை விட— தமிழர்கள் தங்களுக்கென ஒரு தனித் தமிழ்நாட்டை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்வதில் என்ன தவறு நேர்ந்து விடும்?

எனவே தமிழர்களுக்கு முழு இறைமையுள்ள ஒரு தனி நாட்டின் தேவை இந்திரா, இராசீவின் மறைவுக்குப் பின்னர், நாளுக்கு நாள் மிகுந்து கொண்டே போகின்ற உண்மையை, இனிமேலாகிலும், அரசியலில் புகுந்து எதையோ விளைவிக்கப்-போவதாகக் கூறிக் கொண்டிருக்கும் தமிழின அரசியல்காரர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டுச் சிறிய பெரிய கட்சிகளின் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வுணர்வுக்குத் தமிழீழப் போராளிகளின் துணை நமக்குக் கிடைத்தாலும் அதில் தவறில்லை என்று நாம் கருதுகின்-றோம். ஏனெனில் பங்காரப்பாவை விட, நரசிம்மராவை விட, செயலலிதாவை விட, தமிழீழ போராளிகளோ, பிரபாகரனோ கொடியவர்கள் இல்லை. இவர்களை நம்பி நாம் உயிர் வாழ்வதை விட, அவர்களை நம்பி உயிர்ப் போராட்டம் — விடுதலைப் போராட்டம் நடத்தி உயிரிழப்பது மேல்! மேல்!! மேல்!!!

*உரிமைக் கதவை, அவ் வொருநாள் வரும்வரை*
*உரத்த கைகளால் ஓங்கித் தட்டுவோம்!*
*நரிமைக் கயவர்கள் திறவா விடில், அதை*
*நானூறு சில்லுக ளாய் உடைத் தெறிவோம்!*

## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு !

### 1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்--விலையேற்றம்!

அச்சீட்டுத் தாள்களும், மை முதலிய அச்சுப் பொருள்களும் நாளுக்கு நாள் நஞ்சு போல் விலையேறிக் கொண்டே உள்ளன. கடந்த ஆண்டே நம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்— ஆகிய மூன்று இதழ்களின் விலைகளையும் கட்டாயம் ஏற்றி விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் நம் அன்பர்களுக்குச் சுமையிருக்கக் கூடாது என்ற எண்ணத்தால் நாமும் இயலும் வரை அமைந்திருந்தோம். இதழ்ச் சந்தையில் நம் உடனொத்த அனைத்து இதழ்களையும் கண்ணை மூடிக் கொண்டு விலை கூட்டியிருப்பதை அனைவரும் அறிவர்.

ஆகவே முன் இதழிலிருந்து நம் வெளியீடுகளின் விலை, ஆண்டு, அரையாண்டு உறுப்பினர் கட்டணங்களைக் கீழ்க் காணுமாறு விலை கூட்டியுள்ளோம். அன்பர்கள் இக் கூடுதல் விலையைப் பொருட் படுத்தாமல் அவற்றைத் தொடர்ந்து வாங்கிப் பயன் பெறு-வார்களாக.

| | தனியிதழ் | ஆண்டுக் கட்டணம் | அரையாண்டுக் கட்டணம் | வாணாள் கட்டணம் |
|---|---|---|---|---|
| தென்மொழி | 3-00 | 36-00 | 18-00 | 500-00 |
| தமிழ்ச்சிட்டு | 1-50 | 18-00 | 10-00 | 250-00 |
| தமிழ்நிலம் | 1-50 | 36-00 | 18-00 | 500-00 |

கடந்த காலத்தில் இத் தொகைக்கும கூட, குறைய விடுத்து உறுப்பினராகியிருப்பவர்களுக்கு அவரவர்கள் கணக்குக்கு ஏற்ற-வாறு இதழ்கள் நீடித்தும், குறைத்தும் விடுக்கப் பெறும். கட்ட-ணங்கள் நிறைவடைகிற பொழுது புதுப்பிப்பிற் கென்று நினை-வூட்டு மடல்கள் விடுக்கப் பெறும்.

அஞ்சல் துறைச் சட்டங்களின் படி, இதழ்களை நடைமுறை மாதப் பெயரிட்டே அச்சிடுதல் வேண்டும். சில நேரங்களில் இரண்டு மூன்று மாத இதழ்கள் சேர்த்து அச்சிடப் பெறுகின்றன. இது நாள் வரை அவ்வாறு அச்சிடும் மாதங்கள் இதழ்களில் குறிக்கப் பெற்று வந்தன. அத்துடன் இதழ் வெளியீட்டு எண்-களும் இணைத்து அச்சிடப் பெற்று வந்தன.

னி அவ்வாறு குறிக்காமல், நடைமுறை மாதப் பெயரும், அடுத்து வரும் இதழ் எண்ணும் மட்டுமே அச்சிடப் பெறும். ஆனால் உறுப்பினர்களுக்கு விடுக்கப் பெறும் இதழ் எண்ணிக்கைகள் எவ் வகையானும் குறைக்கப் பெறா.

எனவே அன்பர்கள் அச்சிடப் பெறும் நடைமுறை மாதப் பெயர்களைப் பார்த்துக் குழப்பமடைய வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

# பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும்!

முனைவர். கடவூர்.மணிமாறன். கிருட்டிணராயபுரம்.

(தம் முனைவர் பட்ட ஆய்வு நூல் பற்றிய குறுக்க விளக்கம்)

இவ்விருபதாம் நூற்றாண்டில் பாரதி, பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்கனார், தேசிக விநாயகனார், வாணிதாசன், கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் பாட்டு இலக்கியத்துறைக்கு அணி சேர்ந்தவர்கள்.சுரதா, பெருஞ்சித்திரனார், முடியரசன், பொன்னடியான், வைரமுத்து, மு.மேத்தா, அப்துல் ரகுமான், தமிழன்பன், நா.காமராசன், மீரா, சிற்பி முதலியோர் அண்மைக் காலத்தில் இத்துறைக்கு அணிசேர்த்து வருகின்றனர். இவர்களுள் பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் உணர்வு நிலையிலும் கொள்கை நெறியிலும் ஒன்றியவர்கள். தமிழ் மொழி, இன நலக் காப்பில் அழுந்திய நோக்கும் போக்கும் கொண்டவர்கள்.இருவரின் தமிழ்க் கொடைகளும் அளப்பரியன.

சுப்புரத்தினம் பாரதிதாசன் ஆனது போலவே துரை மாணிக்கமும் பெருஞ்சித்திரன் ஆனார். பாரதிதாசன் குன்றிலிட்ட விளக்கென ஒளிர்பவர். குடத்துள் விளக்காய் இருப்பவர் பெருஞ்சித்திரனார். பாரதிதாசனை அறிந்த அளவுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் பெருஞ்சித்திரனாரை அறிந்திலது. பெருஞ்சித்திரனார் என்றவுடனேயே கழகக் காலப் புலவரின் நினைவே பலர்க்கும் எழுகின்றது.

பாரதிதாசனைப் பலரும் அறியத் துணை நின்றது 'குயில்' ஏடு. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகியன பெருஞ்சித்திரனாரை இலக்கிய உலகில் நிலை நிறுத்துகின்றன. புரட்சிக்கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பாரதிதாசன் அழைக்கப்படுவது போலப் பெருஞ்சித்திரனார் பாவலரேறு என்று அழைக்கப் படுகின்றார்.

38 ஆண்டுகள் தமிழாசிரியப் பணியினை மேற்கொண்டிருந்தவர் பாரதிதாசன். அடவி(வன)த்துறையிலும், அஞ்சல் துறையிலும் சிறிது காலம் (ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள்) எழுத்தராகவும், துணை அஞ்சல் தலைவராகவும் பணியாற்றிய பெருஞ்சித்திரனார் அவ்வரசுப் பணியை உதறியெறிந்து, மொழி, இனத் தொண்டை முழுநேரப் பணியாக ஏற்றுக் கொண்டார். புதுச்சேரியில் பிறந்து வாழ்ந்த பாரதிதாசனுக்கும் அங்கு சிறிது காலம் (ஐந்து ஆண்டுகள்) அரசுப் பணியாற்றி வந்த பெருஞ்சித்திரனார்க்கும் 1954 முதல் 59-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் நெருக்கமான தொடர்பு இருந்து வந்துள்ளது. இளமையிலேயே பாப்புனையும் ஆற்றலை இருவரும் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசனை அடியொற்றி எண்ணிறந்த பாடல்களைப் பாடி வருபவர் பெருஞ்சித்திரனார். புதுக்கவிதை எனப்படும் 'உரை வீச்சு' பல்கிப் பெருகி வரும் இக்காலத்தில், மரபில் அழுத்தமாக

நின்று, தம் கருத்துகளை வலியுறுத்தும் போக்கினை இருவரின் பாடல்களும் வெளிப்படுத்துகின்றன.

''எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்'' (1)

என்பதைப் பாரதிதாசனின் கோட்பாடாகக் கொள்ளலாம்;

''கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' (2)

என்பது பெருஞ்சித்திரனாரின் கோட்பாடு; ''கவிஞன் கற்பனை வானில் பறந்து பாடிடும் வானம்பாடி. ஆனால் உலகையும், உலகியல் உண்மைகளையும் அடியோடு மறந்திட்ட கற்பனை சிறப்பதில்லை; மாந்த வாழ்வில் இயற்கை நியதிகளை உளங்கொண்டு, அவர்தம் வாழ்வினைத் தனது கவிதைகளால் உயர்நிலை எய்துவிப்பவனே கவிஞன்'' (3) என்பதற்கேற்பத் தமிழின் வீறு, தமிழின் மாண்பு, தமிழர் தம் பெருமை, வரலாற்றுச் சிறப்பு, எதிர்கொள்ள வேண்டிய விழிப்பு ஆகியவற்றை இவ்விருவரும் பெருமளவில் பாடிக் குவித்துள்ளனர்.

பாவியம், நாடகம், தனிப்பாடல், உரைநடை எனப்பல வடிவங்களில் இருவரும் இலக்கியங்களைப் படைத்துள்ளனர்; தமிழ்க் காப்புணர்வு உலகப்பொதுமை, இனவிடுதலை, இயற்கை ஈடுபாடு, சாதிமத எதிர்ப்பு, பெண்ணடிமை, உழைப்பாளர் பெருமையைப் போற்றுதல் ஆகிய பல்வேறு நிலைகளிலும் இருவரும் உடன்பட்டு ஒத்த கருத்துகளைப் பாடியுள்ளனர்; காலச் சூழலுக் கேற்ப, குமுகாயத்தைச் சீர்த்திருத்த வல்ல சிந்தனைகளை மக்களிடம் உணர்த்துவதையே கவிதைக் கோட்பாடாகக் கொண்டுள்ள இவர்கள், யாப்பு நெறி நின்று பாடு பொருள்களை உயரிய நோக்கில் தெரிவு செய்து உள்ளம் விரும்பியவாறு பாடி மகிழ்கின்றனர்.

தமிழுணர்வு:

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு' (4)

என்று முழங்கிய பாரதிதாசனைப் போன்றே பெருஞ்சித்திரனாரும், அன்புக்கு அடிமையென்றும் அறிவுக்குத் தொழும்பன் என்றும், என்பும் தசையும் தமிழ் ஏற்றத்திற்கே என்றும் தன் இயக்கமெல்லாம் இழிவு மாற்றத்திற்கே என்றும் (5) முழக்கமிடுகின்றார். மேலும் இவர்,

''என்னுடல் எனதில்லை தமிழ்விளை வயல்தான்
என்னின்ற விளைவெல்லாம் செந்தமிழ்ப் பயிர்தான்'' (6)

என்று தமிழுணர்வில் ஊறித் திளைக்கின்றார்;

குமுகாய நோக்கு:

தமிழின உணர்வும், திராவிட இன உணர்வும் இரண்டறக் கலந்து விளங்க, ஆரிய எதிர்ப்புணர்வு இருவரின் பாடல்களிலும்

மேலோங்கி நிற்கிறது. வேற்றுமொழிக் கலப்பை விலக்கித் தனித் தமிழ்பேணும் தகைமை இருவரிடத்தும் ஆளுமை செய்கிறது. பாரதிதாசன் தொடக்கத்தில் ஆத்திகராயும் பின்னர் ஒரு கடவுளை ஏற்றுக் கொண்டவராயும் இறுதியில் கடவுள் மறுப்பாளராகவும் விளங்குகின்றார். பெருஞ்சித்திரனார் முதலில் நாத்திகராக இருந்து பின் இறைமையின் பேராற்றலை வியந்து பாடும் ஓரிறைக் கொள்கையினராக விளங்குகின்றார். பொதுவுடைமையை வரவேற்கும் விரிந்த மனத்தினராகிய இருவரும் தொழிலாளர்களின் பாதுகாவலர்களாக விளங்கி, உழைப்பின் மேன்மைக்கு உரத்த குரல் கொடுக்கின்றனர். குமுகாய இழிவுகளைப் போக்கவும் அவலங்களை நீக்கவும் உரிமைகளைக் காக்கவும் இனமான உணர்வுகளை மீட்கவும் இருவரின் பாடல்களும் எழுச்சிக்கனலை உமிழ்கின்றன.

கதைப்பாடல்கள்:

பாரதிதாசனின் கதைப் பாடல்களில் சாதி மத வேறுபாடுகள், ஆரியர், வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு குடியாட்சி மலர்ச்சி, விடுதலை உணர்வு, கடவுள் எதிர்ப்பு, மடமை ஒழிப்பு, மக்களாட்சி மாண்பு, பொதுவுடைமை, தமிழுணர்வு, காதல், வீரம், மானம் பற்றிய தமிழ்ப் பண்பாட்டு நெறிகள் பெரிதும் இடம் பெறுகின்றன.

பெருஞ்சித்திரனாரின் கொய்யாக்கனி, ஐயை, பாவியக் கொத்து முதலிய கதைப்பாடல்களில் இந்தி எதிர்ப்பு, பொதுமை நோக்கு, இறைமையுணர்வு, தமிழுணர்ச்சி, காதல் சிறப்பு, ஆகியன விரிவாக இடம் பெற்றுள்ளன. கதை மாந்தர்கள் வாயிலாக இருவரின் குறிக்கோள்களும் உணர்த்தப் பெறுகின்றன.

சொல்லாட்சியும் நடையும்:

கருத்துகளில் புதுமை, கற்பனைகளில் புதுமை, இலக்கியப் படைப்பு நோக்கில் புதுமை, நடையில் புதுமை ஆகியவற்றின் வாயிலாகப் பாவலர்களின் உயர்ந்த சிந்தனை வெளிப்படும். படிப்போரின் உள்ளத்தைத் தொடுவதும் ஈர்ப்பதும் சிறந்த சொல்லாட்சியே.

பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் சொல்லாட்சிச் சிறப்பிலும் நடை நயத்திலும் தனித்தன்மை பெறுகின்றனர். உவமைகளைத் திறம்படவும் நயமுறவும் பொருத்தமாக அமைத்து, படிப்போர்க்கு இன்பமூட்ட வேண்டும் என்ற உயரிய நோக்கங்களை இருவரும் பெற்றுள்ளனர். பாரதிதாசன் நடையில் எளிமையும் இயல்பும் மிகுதி. பெருஞ்சித்திரனார் நடையில் புதுச் சொல்புனைவும், பழஞ்சொற்களைப் புதுக்கலும் மிகுதி.

உவமை, உருவகம், வண்ணனை, அணிக்கூறுகள் இருவரின் பாடல்களிலும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்து சொற்சுவையும் பொருட்சுவையும் பயக்கின்றன. இருவரின் சொல்லாட்சியிலும் நடையிலும் தோய்ந்த கழக இலக்கிய ஈடுபாட்டுத் தன்மை வெளிப்படுகிறது. எதுகை மோனைகளுக்காகச் சொற்-

களைத் தேடிக்கொண்டு இருக்காமல், சொற்கள் இவர்களுக்கு ஏவல் புரியும் நிலையை உண்டாக்கியுள்ளனர். உணர்ச்சி நடை, எழுச்சி நடை, பெருமித நடை, அழகு நடை, அருவி நடை ஆகியன இருவரின் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன.

தனித்தமிழ்:

தொடக்கத்தில் பல வடசொற்களைக் கலந்து எழுதிவந்த பாரதிதாசனை மறைமலையடிகளாரின் தனித்தமிழியக்கம் கவர்ந்தது. பிற்காலத்தில் தூய தமிழில் எழுதினார். ''தமிழ் மொழியில் தகாத மொழிகள் கள்ளி போல் படர்ந்து விட்டன; பிறமொழிக் கலப்பு தமிழ்மொழிக்கு வளம் தருவதாகாது'' (7) என்னும் கருத்தில் நம்பிக்கை கொண்டார். தமிழ்ப் புலவர்கள் தனித் தமிழில் நாடகங்கள், படக்கதைகள் எழுத வேண்டும் என்று விரும்பும் பாரதிதாசன், தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தூய தமிழில் பெயர் வைக்க வேண்டும் என்கிறார்.

'தன் காதலனின் ஒவ்வொரு சொல்லும் தைப்பொங்கல் போல், இனிக்கிறது; அது மட்டுமன்று இன்றும் என்றும் தனித் தமிழ் போல இனிக்கிறது' என்று தலைவியொருத்தி கூறுவதாகப் (8) பாரதிதாசன் தனித் தமிழுணர்வை வெளிப்படுத்துகின்றார். தாம் படைத்த குறிஞ்சித் திட்டில் யாவரும் தனித்தமிழ் உணர்வுடன் வாழும் சிறப்பினைக் கூறுமிடத்து,

''பிறமொழி தமிழிற் சேர்க்கும்
பேடிகள் நுழைந்த தில்லை'' (9)

என்று தமிழில் பிற மொழிச் சொற்களைக் கலப்போரைப் பேடிகள் என்று இழித்துரைக்கின்றார். கலப்புத் தமிழை நாடெங்கும் பரப்பி வரும் ஏடுகளை வன்மையாகக் கண்டிக்கிறார் பாரதிதாசன். தனித்தமிழில் தட்டாமல் பேசுமாறு குழந்தைகளைத் தூண்டுகின்றார்:

''தனித்தமிழ் என்பது வேறு ஒரு தனிமொழியன்று; கலப்புத் தமிழினின்று அதை வேறு பிரிக்கவே, அதைத் தூய தமிழ் என்றும் தனித்தமிழ் என்றும் அடைகொடுத்து வழங்க வேண்டுவதாயிற்று'' (10) என்று தனித்தமிழுக்கு விளக்கம் தருகின்றார். பெருஞ்சித்திரனார்.

''தனித்தமிழைப் போற்றுதார் நூலெழுதல்
தமிழ்மொழிக்குக் கேடு செய்யும்!
தனித்தமிழைப் பேணுதார் உரையாற்றல்
தமிழினத்தை அடிமை கொள்ளும்'' (11)

என்று உறுதிபட உரைக்கும் இவர், 'தனித்தமிழ் ஆக்கமும் தமிழ் நெஞ்சு ஊக்கமும் தமிழர்கட்கு இப்போது வேண்டும்' என்கிறார்.

முடிவுரை:

பாரதிதாசனுக்குப் பரம்பரை உருவாகியிருப்பதைப் போலப் பெருஞ்சித்திரனார்க்கும் ஒரு கவிதை வட்டம் உள்ளது. எவருக்கும் எதற்கும் அஞ்சாத நெஞ்சுரமும் தலைத்தாழாத் தன்மானப்போக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# தமிழ் மொழிக் கல்வி

(குடந்தை வீரா.இராசகோபாலன், கீ.க.இ;க.மு.)

1. மழலையர் பயிற்றுவிப்பு முறை (Nurture System), 2. சிறுவர் இயற்பாங்குக் கல்வி முறை (Montessori System), 3. தொடக்கக் கல்வி முறை (Elementary Education System), 4. தொடக்க மேல்நிலைக் கல்வி முறை (Higher Education System), 5. உயர்நிலைக் கல்வி முறை (Secondary Education System), 6. மேல்நிலைக் கல்வி முறை (Higher Secondary Education System), 7. பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு முறை (Matriculation System), 8 கல்லூரிக் கல்வி முறை (Collegiate Education System) எனக் கல்வி முறைகள் பல. இம் முறைகளை ஒரு முகப்படுத்திச் சீர்மை செய்து, 1. மழலையர் கல்வி, 2. தொடக்கக் கல்வி, 3. உயர்நிலைக் கல்வி, 4. கல்லூரிக் கல்வி என நான்கு அடுக்குகளாகச் சீரமைத்தல் இன்றியமையாதது. இதனால் மக்களுக்கும், மாணவர்களுக்கும் பெரும் பயன் விளையும். கல்விக்காகச் செலவழிக்கப்படும் பணத்துக்கும் நல்ல பலன் கிட்டும்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கும், வளைந்து கொடுக்காத தனித்தன்மையும் இருவரிடையேயும் காணக்கிடக்கும் பொதுக்கூறுகள்; மொழி, இன, நாட்டு விடுதலையில்—மீட்சியில் உயரிய குறிக்கோளினராகிய இவர்கள், தமிழுணர்வு தழைத்துச் செழித்தோங்க வேண்டும் என்று விரும்புவோர் ஆவர். குமுகாயச் சீர்திருத்தப் பார்வை மிக்க இவ்விருவரும் பெண்ணுரிமைகள், பொதுமை நலன்கள், உரிமை வேட்கைகள் ஆகியன காக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்பு மிக்கவர்கள்; தமிழரின் பண்பாடு, நாகரிகம், கலை, உயர்வு, மொழி ஆகியவற்றின் கலப்புக்கும் அழிவுக்கும் காரணியமாய் இருப்பது ஆரியமே என்பதில் அழுத்தமான நம்பிக்கையுடைய இவர்களின் பாடல்களில் மாந்தநேய உணர்வுகள் மேலோங்கிச் சிறக்கின்றன.

அடிக்குறிப்புகள்:

1. பாண்டியன் பரிசு, இயல் 55, ப. 96
2. 'தென்மொழி' முகப்புப்பாடல்
3. அன்பழகன், க.பாரதிதாசன் கவித்திறன் அணித்துறை
4. பாரதிதாசன் கவிதைகள் முதற்றொகுதி, ப.36
5. பெருஞ்சித்திரனார், கனிச்சாறு மூன்றும் தொகுதி, ப.95
6. —மேலது—ப.97
7. அண்ணா: அறிஞர், தமிழரின் மறுமலர்ச்சி, பக். 40 41
8. தேனருவி, ப.36
9. குறிஞ்சித்திட்டு, ப.7
10. பெருஞ்சித்திரனார்; 'தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்' (கட்டுரை) தென்மொழி சுவடி 17 ஓலை 8, ப.29
11. கனிச்சாறு—முதற்றொகுதி, ப.38.

1. கீழ்நிலை (Lower), 2. மேல்நிலை (upper), என இரு நிலை கொண்ட மழலையர்க்குரிய விளையாட்டுமுறைக் கல்விப்பள்ளி முறை (Kinder garden system), 3. முதல் வகுப்பு முதல் எட்டாம் வகும்பு முடிய தொடக்கக் கல்வி முறை (Elementary Education System), 4. ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு முடிய உயர் நிலைக் கல்வி முறை (Secondary Education System),5. கல்லூரிக் கல்வி முறை(Collegiate Education System) என நான்கு அடுக்கு முறைகள் அமையுமாயின் +1, +2 எனும் தொல்லை ஒழியும். **பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வு முறை (Matriculation System) தேவையற்றது. எனவே, முற்றும் நீக்கப்படவேண்டிய ஒன்று.**

மழலையர்க்குரிய விளையாட்டுமுறைக் கல்வி பள்ளிச் சேர்க்கை இரண்டரை அகவை (வயது) என உள்ளதை இரண்டு அகவை முடிந்திருக்க வேண்டும் (Two years completed) எனவும், தொடக்கப் பள்ளிச் சேர்க்கை நாலரை அகவை என உள்ளதை நான்கு அகவை முடிந்திருக்க வேண்டும் (Four years completed) எனவும், அகவை வரம்பு உறுதி செய்தல் நலம். "ஐந்தில் **விளையாதது ஐம்பதில் விளையாது"**

மாவட்ட அளவில் எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு நடத்தித் தொடக்கப்பள்ளி விடு சான்று (Elementary School Leaving Certificate) வழங்கல் வேண்டும். **அப்பொழுதுதான் தொடக்கப் பள்ளி. ஆசிரியர் பெருமக்களுக்குக் கடமை உணர்வுடன் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி ஏற்படும்.** பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு நடத்தித் தேர்வுச் சான்று வழங்கல் வேண்டும், பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு நடத்தி உயர் நிலைப் பள்ளி விடு சான்று (Secondary School Leaving Certificate) வழங்கல் வேண்டும்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்றார் வள்ளுவப் பெருந்தகை.

தற்போது தமிழக அரசு ஆளுகைக்குள் உள்ள பள்ளி,கல்லூரி-களில் முதன் மொழி (First Language or First part) தமிழ் அல்லது ஏதாவதொரு மாநில(பிராந்திய)மொழி (Regional lauguage) எனவும், இரண்டாவது மொழி (Second Language or Second Part) ஆங்கிலம் எனவும் உள்ளன. இந் நிலை மாறினாலன்றித் தமிழ் மொழி ஒரு போதும் கட்டாய மொழியாக ஆகமுடியாது. எனவே, **முதன் மொழி தமிழக அரசின் ஆட்சி மொழி தமிழ் (State government Official Language)** எனவும், **இரண்டாவது மொழி ஆங்கிலம் அல்லது ஏதாவதோர் இந்திய மொழி** எனவும் அர-சாணை பிறப்பித்தலோ **அல்லது** சட்டம் இயற்றலோ **வேண்டும்**. அப்பொழுதுதான் தமிழகத்தில் எவரும் தமிழ் மொழி கற்காது பட்டம் பெற்றுச் செல்ல முடியாத நிலை உருவாகும். அது மட்டுமன்று

மொழி வழிச் சிறுபான்மை மக்கள் (Minority People) இந்திய அரசியல் அமைப்பு வழங்கும் அடிப்படை உரிமை தங்களுக்கு மறுக்கப்படுகிறது என்று வழக்கு மன்றம் செல்ல முடியாது. சென்றும் நிற்காது. மேலும், இரு மொழிக் கொள்கையும் சிறப்புற்றுச் செழித்தோங்கும்; முழுமையும் பெறும்.

வரலாறு (History), நிலவியல் (Geography) போன்ற மாந்த, உலக வாழ்க்கை இயல் பாடங்களின் (Humanism Subjects) பயிற்று மொழி தமிழ் எனவும், கணக்கியல் (Mathematics), அறிவியல் (Science) போன்ற அறிவியல் பாடங்களின் (Science Subjects) பயிற்று மொழி ஆங்கிலம் அல்லது அவர்கள் எடுத்துக் கொண்ட இரண்டாவது மொழி எனவும் அறிவிக்கப்படுமாயின் பயிற்று மொழிச் சிக்கல் ஓரளவு தீரும். முதற் கட்ட நடவடிக்கையாகவும் அமையும். தேர்வுகளும் இம் முறைகளிலே நடத்தல் இன்றியமையாதது. அப்பொழுதுதான் ஆங்கிலப் பயிற்று மொழி, தமிழ்ப் பயிற்று மொழி எனும் உயர்வு, தாழ்வு மனப்பான்மை ஒழியும்; வேறுபாடும் நீங்கும். மாணவர்கள் இடையே ஏற்றத் தாழ்வு அகலும். சமநோக்கு, சம உணர்வு, சம நிலை உண்டாகும். இரு மொழி அறிவும் சமன்—சம நிலை பெறும்.

மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப் பட்டுள்ள கல்வியை மீண்டும் பழையபடி மாநிலப் பட்டியலுக்குக் கொணர்தல் இன்றியமையாதது. அது மட்டுமன்று நடுவண் அரசு ஆளுகைக்குள் உள்ள கல்வி நிலையங்களைத் தமிழக அரசு ஆளுகைக்குள் கொணர்ந்து, அவற்றுக்கு நடுவண் அரசிடமிருந்து நல்கையும் (மானியமும்) பெறுதல் வேண்டும், அப்பொழுதுதான் கல்வியில் இரட்டை ஆட்சி முறை ஒழியும். இது தக்க நேரம்; நழுவ விடுதல் கூடாது. நழுவ விடுதல் அறிவுடைமையும் ஆகாது,

இவற்றைச் செய்யாது, தமிழ் மொழி கட்டாய மொழி எனக் கூறுவதும், பேசுவதும், அறிவிப்பதும் வெறும் வெற்றுப் பேச்சு, வெற்று வேலை—ஏமாற்று வேலை, மாயமாலம்—செப்படி வேலை. O


பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

**ஓ! ஓ! தமிழர்களே!**

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத் தாள் பதிப்பு : 9-00

செய்தியச்சுத் தாள் பதிப்பு: 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு: பதிவஞ்சல் செலவு தனி

தென்மொழி, சென்னை-5.

# பாவாணர் நூல்களில் பழமொழிகள்!

(வெங்காலூர் சி.பூ.மணி அண்மையில் தொகுத்து வெளியிட்டிருக்கும் நூலில் உள்ள சில சுவையான பழமொழிகள் இவை. முழு நூலையும் சுவைக்க விரும்பும் அன்பர்கள் சென்ற விதழ் நூல் நிறைப் பகுதியில் உள்ள முகவரிக்கு எழுதிப் பெற்றுப் பயனடைக.)

- அகப்பை பிடித்தவள் தன்னவளானால், அடிப்பந்தியில் இருந்தாலென்ன, கடைப் பந்தியில் இருந்தாலென்ன?
- அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம், கறிவேப்பிலை என்பாள்!
- அஞ்சினவனைக் குஞ்சும் விரட்டும்!
- அடைத்தவன் காட்டைப் பார்;
  மேய்த்தவன் மாட்டைப் பார்!
- அப்பன் அருமை மாண்டால் தெரியும்
  உப்பின் அருமை இல்லாவிட்டால் தெரியும்!
- ஆடையில்லாதவன் அரை மாந்தன்;
  கல்வி இல்லாதவன் கால் மாந்தன்!
- எட்டினால் முடி(யைப் பிடி!); எட்டாவிட்டால்
  அடி(யைப்பிடி!)
- கடிவாளமும் சேணமும் இட்டாலும், கழுதை குதிரையாகாது!
- கவலை கறியைத் தின்னும்!
- கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்!
- குட்டக் குட்டக் குனிகிறவனும் முட்டாள்;
  குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்!
- செய்த கை சேவேறும்;
  செய்யாத கை நோவேறும்!
- தவத்திற்கு ஒருவர்; கல்விக்கு இருவர்; வழிக்கு மூவர்!
- தென்னை மரத்தைக் கோணலாக்கியவரும்,
  தேக்கு மரத்தை நேராக்கியவரும் இல்லை!
- நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும்
  தோட்டிக்குப் புல் சுமக்கிறது போகாது!
- பணமிருந்தால் மனமிராது; மனமிருந்தால் பணமிராது!
- மட்டிப் பயலுக்குத் துட்ட குருக்கள்!
- மேட்டுப் புன்செயை உழுதவனும் கெட்டான்;
  மேனா மினுக்கியை மணந்தவனும் கெட்டான்!
- வலிய வந்தால் கிழவி!
- வாழை வடக்கு, வான் கமுகு தெற்கு,
  சோலை கிழக்கு, துய்ய பலா மேற்கு;

❖ விளையாட்டுப் பிள்ளைகள் செய்த வேளாண்மை
வீடு வந்து சேராது.

❖ ஆழம் முங்ஙியால் குளிரில்ல. (மலையாளம்)
(ஆழத்தில் முங்கிவிட்டால் குளிரில்லை)

❖ தலயண மாறியால் தலக்கேடு பொறுக்குமோ? (மலையாளம்)
(தலையணை மாறினால் தலைவலி பொறுக்கலாமோ)

❖ நரி நரெச்சாலும் கடிக்கும். (மலை)
(நரி நரைத்தாலும் கடிக்கும்)

❖ பாற்றி துப்பியால் பள்ளியாயிலும் துப்பாம்; (மலை)
(பார்த்துத் துப்பினால் படுக்கையறையிலும் துப்பலாம்)

❖ உப்பு தீந்தினுயெ நீரு பர்வெ. (துளு)
(உப்புத் தின்றவன் நீர் பருகுகிறான்)

❖ காலொரு தக்க கோல, தேசொகு தக்க பாஷெ,
தாளொகு தக்க மேள (துளு)
(காலத்துக்குத் தக்க கோலம், தேசத்துக்குத் தக்க பாஷை,
(தாளத்துக்குத் தக்க மேளம்)

❖ பஜெ இத்தினுது காரு நீளொடு (துளு)
(பாயிருக்கிற அளவு கால் நீட்ட வேண்டும்)

❖ மல்ல புதெ மெல்ல ஜாவொடு (துளு)
(மல்ல (பெரிய) பொதியை மெல்ல இறக்க வேண்டும்)

❖ மாதிக இல்லுடு உணசு ஆண்டப்பிராணகு தானெ? (துளு)
(பறையன் இல்லின் உண வானாலும் பார்ப்பானுக்கு என்ன?)

❖ சிராக் தலே அந்தேரா (இந்தி)
(குத்து விளக்கிற்கும் குண்டிக்குக் கீழ் இருட்டு)

❖ ஸரூரத் கே வக்த் கதேகோ பீ,
பாப் பனா பட்தா ஹை. (இந்தி)
(காரியம் முடியும் மட்டும் கழுதையையும்
காலைப் பிடிக்க வேண்டும்)

❖ A father is treasure, a brother a comfort,
but a friend is both; (ஆங்)
(தந்தை செல்வம்; உடன் பிறந்தவன் உதவி;
நண்பன் இருநிலையும்!

❖ Oil and truth will get upper most atlast (ஆங்)
(எண்ணெயும் உண்மையும் இறுதியில் மிதந்தே தீரும்)

❖ Riches serve a wise man, bur command a fool; (ஆங்)
(செல்வர்கள் அறிவாளிக்கு உழைப்பார்கள்; ஆனால்
முட்டாளுக்குக் கட்டளையிடுவார்கள்)

❖ When you are at Rome, do as Rome does;
(நீ ரோமில் இருந்தால் ரோமானியனைப் போல் செய்)

# இந்திரா பார்த்தசாரதியின் தவறான தமிழ மதிப்பீடுகள்!

—வெங்காலூர் குணா

**வரலாறு என்பது அடிப்படை அறிவியல் :**

**'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா'** (**தினமணி** 14-10-1991) என்னும் தலைப்பில் அமைந்த இந்திரா பார்த்தசாரதியின் கட்டுரையில் முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துகள் கோலாட்டம் ஆடுகின்றன.

**வரலாறு என்பதே அடிப்படை அறிவியல்** (History is the basic Science) என்னும் உண்மையை முதன்முதலில் எடுத்துரைத்தவர்கள் மார்க்சும் ஏங்கெல்சும் ஆவர். உயிரின் வரலாறே உயிரியல்; நில அடுக்குகளின் வரலாறுதான் நிலவியல்; இயற்கையின் வரலாறே இயற்கை அறிவியல்; கொள்கையியல் (ideology) என்பதுகூட வரலாறேயாம் என்றெல்லாம் அவர்கள் பாடம் படித்தனர்.

['We know only a single sci nce, the science of history. One can look at history from two sides and divide it into the history of Nature and the history of men. The two sides are, however, inseparable; the history of men are dependent on each other so long as men exist. The history of Nature, so called Natural science, does not concern us here; but we will have to examine the history of men, since almost the whole ideology amounts either to a distorted interpretation of this history or to a complete abstraction from it. Ideology is itself only one of the aspects of this history".

— Karl Marx and Frederick Engels,
The German Ideology, Progress Publishers,
Moscow, 1964, p. 28ff]

**வரலாறு என்பது குப்பைத் தொட்டியுமாகும்:**

இந்த அறிவியல் நிலையிலிருந்து பின்னர் பிறழ்ந்த ஏங்கெல்சு, 1884 ஐரோப்பியப் புரட்சிகளில் தென்சுலாவிய தேசிய இனங்கள் பங்கெடுக்காமையைக் கண்டு எரிச்சலுற்று, அந்தத் தென்சுலாவிய தேசிய இனங்களையெல்லாம் **'வரலாற்றில் இல்லாத் தேசங்கள்** (Non-Historic Nations) எனச் சொல்லித் தூற்றித் தலைகீழ்ப் பாடம் படித்தார். இந்தப் பிந்தியக் கூற்று, வரலாறென்பதே ஆண்டை இனங்களால் எழுதப் பெற்றது என்னும் உண்மையைச் சுட்டுவதாக இருக்கின்றது. இதுவரை எழுதப்பெற்ற வரலாறெல்லாம் ஆண்ட இனங்களின் வரலாறே எனக் கொண்டால் **'வரலாறு ஒரு குப்பைத் தொட்டி'** என்னும் கூற்று ஓரளவு உண்மையாகும்.

ஓரினம் மற்ருேரினத்தைத் தாக்கமுறச் செய்ததே வரலாருக நிற்கிறது :

ஓரளவு உண்மையெனின், அது பகுதி உண்மையெனப் பொருள்படும். இயற்கையின் இயற்பாடுகளைப் பொறுத்த வரையில் 'வரலாறே அடிப்படை அறிவியல்' என்னும் விளக்கம் மெய்ப்படுகையில், மாந்த வரலாற்றைப் பொறுத்தவரையில் அந்த வரையறை கேள்விக்குள்ளாகின்றது. ஒரு குலம் இன்ெருரு குலத்தையோ, ஓர் இனம் இன்னேர் இனத்தையோ வீழ்த்தியும் வென்றும் தன்வயமாக்கிக் கொண்டதுவே இவ்வாறு எழுதப்பட்ட வரலாறு. வீழ்ந்த குலமோ, இனமோ வீழ்த்திய குலத்துடனே இனத்துடனே ஒன்ருகக் கலந்து மயங்கிக் கரைந்ததும் உண்டு. வீழ்த்தப் பெற்ற குலமோ இனமோ வலிமையான மூலப் பண்பாட்டைக் கொண்டிருப்பின், வீழ்த்திய குலமோ இனமோ அந்த உயரிய பண்பாட்டில் மயக்குற்றுக் கலந்து மயங்கி வீழ்ந்தோரின் பண்பாட்டையே தம்முடைய சொந்தப் பண்பாடாக ஆக்கிக் கொண்டதும் உண்டு. மக்கள் வரலாறு இவ்வாறெல்லாம் வளர்ந்துள்ளதே வரலாற்றில் காணும் குழப்பங்களுக்கெல்லாம் களம் அமைத்துக் கொடுக்கின்றது.

அருவமான வரலாறு ஒரு செப்படி வேலை :

உண்மை இவ்வாறிருக்க, இனப்போர்களும் பூசல்களும் இல்லாத ஒரு மாந்த வரலாற்றையோ உலக வரலாற்றையோ எழுதப் பார்ப்பது, இல்லாத ஊருக்குப் போகாத வழியைக் காட்டும். இடம், பொழுது (Space and Time) என்னும் அறிவுத்திணைகளுக்கு அப்பாற்பட்ட அருவமாக (பேயுருவாக) வரலாற்றை வடிக்க முயலும் வீண் முயற்சி அஃதாகும். தனித்தனி மக்களின்—இனங்களின்—வரலாறென்னும் உருப்படியான வரலாறில்லாத அத்தகைய அருவமான பொது வரலாறு ஒரு செப்படி வேலை (வித்தை); கற்பனைக் கோட்டை.

வரலாறு என்பதே சார்பியல் அறிவு:

'வரலாறு ஒரு குப்பைத் தொட்டி' என்னும் கூற்று ஒரு நிலைப்பாடு (Stand Point). சாதியில் மேலோர் கீழோர் என்னும் நிலையை ஆண்டவன் பிறப்பு அடிப்படையில் ஆக்கித் தந்ததாகச் சொல்லும் பார்ப்பனிய வாழ்க்கை நெறியையும் அரசியல் பொருளியல் கட்டுமானங்களையும் தழுவிய வரலாறு புறையருக்கும் (பறையருக்கும்), பள்ளருக்கும் பிறருக்கும் ஒரு குப்பைத் தொட்டியாகவே தெரியும். ஆனல் பார்ப்பனிய நலன்களுக்கோ அது தெய்வத் தன்மையைக் கொண்டதாகத் தோன்றும். வரலாறென்பதே சார்பியல் அறிவேயாகும். ஆண்டைக்கும் அடிமைக்கும், பார்ப்பனியத்திற்கும் தீண்டப்படாதோரென ஒதுக்கப்பட்டோருக்கும் பொதுவான வரலாற்றுப் பார்வையென யாதும் இருக்க இயலாது. மாக்சு முல்லர், மானியர் வில்லியம்சு போன்ற ஐரோப்பியர்களின்

அறிவு மடிவில் 'இந்து' என்னும் பெயருடன் மறுபிறவி யெடுத்த பார்ப்பனியத்தை அடியொற்றி ஒரு புதிய 'இந்திய' வரலாற்றை எழுதத் தலைப்படுவதும் ஓர் அருவமான வரலாற்று விளக்கமாக இருந்து வருகின்றது.

**முற்போக்கு முக்காடு போட்டுக் கொண்ட சாதியுணர்வு :**

இந்திரா பார்த்தசாரதி இதற்கு முன்னர் அண்மையில் தினமணியில் எழுதிய கட்டுரையில் சொன்னதைப் போன்றே தேசிய இனம் (Nationality) என்னும் சொல்லே ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் வந்த ஒரு கருத்தாக்கம் என்பது உண்மை. பிறப்பு வழியிலான சாதி ஏற்றத் தாழ்வை இலக்கணமாகக் கொண்ட இந்திய வாழ்வியலுக்கு ஒப்போலைக், (ஓட்டுப் பொறுக்கிக்) குடியாட்சி எந்த அளவுக்கு ஐரோப்பியரால் புகுத்தப் பெற்ற ஓர் அரசியல் நெறியும் இல்க்கணமும் ஆகுமோ, அதே அளவுக்கு அந்தத் தேசிய இன'க் கொள்கையும் ஓர் அயல் நாட்டுச் சரக்கு. 'தேசிய இனக் கொள்கையை மட்டும் எட்டிக் காயென எதிர்ப்பவர்களும் வெறுப்பவர்களும் மேலைக் குடியாட்சி (சனநாயக) நெறியை மட்டும் குளிப்பாட்டி கொலுவேற்றி அழகு பார்ப்பதேனோ? இங்குதான் சாதி உணர்வு முக்காடு போட்டுக்கொண்டு நிற்பதைக் காண முடிகின்றது.

**இந்திரா பார்த்தசாரதியின் பார்ப்பன ஓலம்!**

வீழ்ந்த ஓர் இனமோ, சாதியோ தான் வீழ்ந்துபட்டதற்கும் அடிமையுண்டதற்கும் முந்திய வரலாற்றை ஓர் இருமுனைக் கத்தியாகப் பயன்படுத்தவே செய்யும். இது வரலாற்றின் ஊழ்பாடு, ஆக்கலும் காத்தலும் நீக்கலும் என்னும் மூன்று மாறுபட்ட இயற்பாடுகளையும் சுட்டுவதாக வரலாறென்னும் அதன் கருவி இருக்கவே செய்யும். இன்றைய அடிமைத் தனத்தை அழிக்கவும், செயல்வினையின் ஊடே தான் கண்ட படிப்படி வளர்ச்சியைக் காக்கவும், தனக்கென தலையறுத்த ஒரு விடுதலை வாழ்வியலை அஃது ஆக்கிக் கொள்ளவும் செய்யும். அடிமை விலங்கொடிக்கப் பார்க்கும் இந்த ஆக்கப் பணியைக் கண்டு அரண்ட ஆண்டைகள், அதை ஓர் அழிவுச் செயலெனச் சொல்லி அலறவும் கொச்சைப்படுத்தவும் தூற்றவும் செய்வர். இந்திரா பார்த்தசாரதியின் கட்டுரையில் இது போன்ற புலம்பல்தான் முற்போக்கு முக்காடு போட்டுக் கொண்ட பார்ப்பன ஓலமாகி ஒலிப்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

**முன்னுக்கும் பின்னுக்கும் முரண் :**

முன்னுக்குப் பின் முரணாக வீடு கட்டியாடும் இவருடைய கருத்துகளில் சிலவற்றைச் சுட்டலாம். அவையாவன :

**சமசுக்கிருதம் ஒரு குழூஉக் குறியே!**

1. 'சமசுகிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்ட இனம் இந்தியாவில் எப்போதுமே இருந்ததாகத் தெரிய வில்லை' என்பது இந்திரா பார்த்தசாரதி வெளிப்படுத்து கின்ற உண்மை.

சங்கத மொழியாக (குழூஉக் குறியாக) வடிக்கப்பட்டுப் புரக்கப்பட்டு வந்த ஒரு மேட்டுக்குடி மொழியன்றி, மக்கள் பேசிவந்த மொழியாகவும் பேச்சு வழக்கைத் தழுவி எழுத் தேறிய செவ்விய தனிமொழியாகவும் சமசுக்கிருதம் என்றுமே இருந்ததில்லை என்பதே இந்தக் கூற்றுக்குரிய பொருளாகும்.

**சமசுக்கிருதத்திலிருந்து வேறுவேறு மொழிகள் பிறந்தன என்பது மலடி பிள்ளைகள் பெற்றாள் என்பதைப் போன்றதே!**

பேச்சு வழக்கில் தனக்கென ஒரு தனி நிலப்பரப்பைக் கொண்டதொரு மொழியாக சங்கதம் (சமற்கிருதம்) இருக்க வில்லையென்றும் அது பொருள்படும். இந்த நிலையிலிருந்து உடனே தடம் புரண்டு போகும் அதே ஆசிரியர்.

"சமற்கிருதத்திலிருந்து கிளைத்த கடிபோலி, பிருச பாசை.போஃச்புரி, மைதிலி, இராசசுத்தானியம், அதன் வட்டார வழக்குகள், குசராத்தி. மராட்டி, ஒரியா, வங்காளி, அசாமி என்று நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்பட்டு வருகின்றன."

—என்று சொல்கின்றார். யாருக்குமே தாய்மொழியாக இருந்திராத சங்கதத்திலிருந்து நூற்றுக்கணக்கில் இத்தனை மக்கள் மொழிகளும் பிறந்தது எப்படியோ? இம் மக்கள் மொழிகள் யாவும் மலடி பெற்ற பிள்ளைகளாமோ போதா- மைக்கு இந்த மக்கள் மொழிகளையெல்லாம் "சமசுக்கிருதத் தின் கிளை மொழிகள்" என்று வேறு இந்திரா பார்த்தசாரதி பாடம் படிக்கின்றார்!

**பிராகிருதத்திலிருந்தே வட இந்திய மொழிகள் அண்மையில் தோன்றின. சமசுக் கிருதத்திலிருந்து இல்லை :**

2. "வெவ்வேறு பிராந்தியங்களுக்கிடையே பொது வாக சாதாரண மக்களிடையே வழங்கிய மொழியாக பிராக்கிருதமும் அதன் வட்டார வழககுகளும் இருக்கின்றன."

—என்னும் இந்திரா பார்த்தசாரதியின் கூற்றில் பகுதி உண்மையுண்டு. இது வட இந்திய சூழலுக்கு மட்டுமே

பொருந்தும். பகாத (பிராகிருத) மொழிகளிலிருந்தே இன்றைய வட இந்திய மொழிகள் பலவும் அண்மையில் தோன்றினவென்பதே ஆய்ந்தோரின் கருத்து.

**சமசுக்கிருதம் பொதுமொழியாக இருந்ததென்னும் குளறுபடி :**

> ''சமசுக்கிருத மொழிக்கு எல்லாருமே சொந்தம் கொண்டாடியதால், பாரத அறிஞர்களிடையே கருத்துப் பரிமாற்ற மொழியாக சமசுக்கிருதம் அமைந்தது. தமிழ் நாட்டில் பிறந்த இராமானுசரும், கேரளத்தில் பிறந்த சங்கரரும், கருநாடகத்தில் பிறந்த மாதவரும் தங்கள் தங்கள் தத்துவக் கோட்பாடுகளைத் தங்கள் தாய் மொழியில் எழுதாமல் சமசுக்கிருதத்தில் எழுதியது, பிறமொழி பேசுகின்ற அறிஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் என்று ஊகிக்க இடமிருக்கிறது,''

—என்னும் இந்திரா பார்த்தசாரதியின் கூற்றில் இத் துணைக் கண்டம் முழுவதுமாகவிருந்த ஒரு பொது மொழி சங்கத மொழிதானென்னும் கருத்து அழுத்தம் பெறுகின்றது

**கருத்துகளில் முன்பின் முரண்பாடுகள் :**

> ''வட இந்தியாவில் சாதாரண மக்கள், அவர்கள் எந்த பிராந்தியத்திலிருந்தாலும், தங்களுக்குள் கருத்து களைப் பரிமாறிக் கொள்ளும் மொழியாக இந்துசுத்தானி அமைந்து விட்டது.''

—என இன்னோர் இடத்தில் அதே கட்டுரையில் வருகின்றது இதனால், இந்தியா முழுவதும் ஒருகால் பொதுமொழியாக இருந்து வந்த சங்கதத்தை இந்தசுத்தானி மொழி வந்து தூக்கியெறிந்து விட்டு அந்த இடத்தை அது பறித்துக் கொண்டதாகப் பொருள்படுகின்றது.

வட இந்திய இனங்களெல்லாம் பண்டுதொட்டு பொது பொதுமொழியாக இருந்துவந்த சங்கதத்தை நீக்கிவிட்டு இந்துசுத்தானியைப் பொதுமொழியாக வைத்துக் கொண்டன வெனின், அவரின் கூற்றுப்படியே அன்று தென்னகத்திற்கும் பொதுமொழியாக இருந்துவந்த சமற்கிருதம், தென்னகத்தில் மட்டும் திடீரெனக் காணாமல் போய் 'திராவிட மொழிகளுக் கென ஒரு தொடர்பு மொழி இல்லாமல் போனதேனோ?

> ''திராவிட மொழியினர் தங்களுக்கு ஒரு தொடர்பு மொழியை உருவாக்கிக் கொள்ளாமல் இருந்ததற்கு இன்னொரு காரணம் வடநாட்டில் மொகலாயர் ஆட்சி

இருந்தது போல், தென்னாடு முழுவதற்குமென்று ஒரு மத்திய ஆட்சி ஏற்படாததுதான்''.

என்னும் அவருடைய கூற்று அதனால் அடிப்பட்டுப் போக வில்லையா?

''சமசுக்கிருதத்தின் கிளைமொழிகள், தங்களுக்கென்று ஒரு தொடர்பு மொழியாக இந்துசுத்தானியை (இந்தி) அமைத்துக் கொண்டதுபோல், திராவிட மொழியாகிய தெலுங்கு, கன்னடம், தமிழ், மலையாளம் ஆகியவை தங்களுக்கென்று ஒரு தொடர்புமொழியை உருவாக்கிக் கொள்ளவில்லை என்பதுதான் சரித்திர துர்பாக்கியம்''

—என்னும் இந்திரா பார்த்தசாரதியின் கூற்று இந்தியா முழு வதற்கும் முற்காலத்தில் சங்கதமே (சமசுக்கிருதமே) பொது மொழியாக இருந்து வந்ததென்னும் அவருடைய முந்திய பாடத்தைப் பொருளற்றதாக்கி விடுகின்றது.

3. ''இந்து சமயம் என்று அழைக்கப்படும் வாழ்க்கை, நடைமுறையில் திராவிடக் கலாச்சார கூறுகள்தாம் அதன் அடிநாதமாய் ஒலிக்கின்றன என்பது அறிஞர் கருத்து...... தெய்வம் மனிதனாக வந்து, மனிதனைத் தெய்வமாக்கும் முயற்சியும் இதையொட்டி எழுந்த கருத்துதான்.''

—என்னும் இந்திரா பார்த்தசாரதி,

'வடக்கில் விரிந்தும் தெற்கு நோக்கி வரும்போது குறுகியும் இருக்க வேண்டிய நிலப்பரப்பில், வெப்ப நிலை, அட்சக்கோடு வேறுபாடுகளால் ஒருமைப்பாட்டுச் சிக்கல் ஏற்படுவது சகசம்தான்'.

என்னும் மேற்கோளைக் காட்டி, வடவருக்கு வானமளாவ விரிந்த மனப்பான்மை என்றும், தமிழருக்கோ நிலவியல் அடிப்படையில் குறுகிய மனப்பான்மை அமைந்துவிட்ட தென்றும் பாடம் படிப்பது முன்னுக்குப் பின் முரணாக இல்லையா? 'திராவிடப் பண்பாட்டுக் கூறுகளை அடியொற்றிய 'இந்து'க் கொள்கை இந்த குறுகிய உளளம் படைத்தோரா லேயே ஆக்கப்பட்டதென அது பொருள்படாதோ?

4. ''சமசுகிருதத்தினின்று கிளைத்த மொழிகள் என்பதால் வட இந்திய மொழிகள் பேசும் மாநிலத்தவரை, மொழியைச் சார்ந்த கலாச்சாரப் பொதுமைக் கூறுகள் பிணைக்கின்றன''

—என்னும் இந்திரா பார்த்தசாரதி, சங்கதத்திலிருந்து கிளைக் காத தமிழிய (திராவிட) மொழிகளுக்கு மொழிப் பண்பாட் டைத் தழுவிய பொதுவான கூறுகள இல்லையென்கிறாரா?

> ''ஆரியம்—திராவிடம் என்பது மொழிவழி வரையறை இனம் பற்றியதன்று' என்று மாக்சுமுல்லர் எப்போதோ தெளிவாகக் கூறிவிட்டார்''

என அடித்துரைக்கும் இந்திரா பார்த்தசாரதி, அதே கட்டுரையின் இன்னோர் இடத்தில்,

> ''சாதி, மனிதனால் உருவாக்கப்பட்டது. இனம் உயிரினத் தோற்றத்தில் ஏற்பட்ட யதேச்சையான சம்பவம்''

என்று விளக்குகின்றார். தேசிய இனம் (Nationality) என்னும் பொருளில் இனமென்னும் சொல்லை ஆளாமல் மாந்த உடலினம் (Race) என்னும் பொருள்படச் சொல்லித் தமிழர்கள் ஒரு தனி தேசிய இனமாவரென்னும் உண்மையை இவர் போன்றோர் கொச்சைப்படுத்துவதேனோ?

**வாலை விழுங்கிடும் தலை :**

திராவிட இயக்கமாயினும் (இறைநெறிக் கழகம், ஆரியக் கழகம், பிரமர் கழகம் போன்ற) ஆரியர் இயக்கமாயினும், யாருமே அவற்றைத் தத்தம் சாதிச்சூழலை வைத்துக் கொண்டே ஆதரிக்கவும் எதிர்க்கவும் செய்வர். இஃது இயற்கை, ஆனால், அத்தகைய சாதிச்சூழலிலிருந்து மிக் குயர்ந்து விட்டதாக யாராவது கதைப்பாராயின், அஃது ஒரு பெரிய பொய்யாகவே இருக்கும். தன்மானம் கொண்ட புறயன் (பறையன்) சாதி ஒழிய வேண்டுமென முழங்கினால், அது சாதிக் கொடுமையின் இன்னல்களையும் இழிவுகளையும் தொன்றுதொட்டுச் சுமந்து வந்த அவனுடைய வாழ்க்கைச் சூழல் கொட்டுகின்ற போர் முரசாகவே இருக்கும். அந்தப் புறயனின் விடுதலை முழக்கத்திற்கு எதிராக ஓலமிடுகின்ற பார்ப்பனர்களோ பிறமேல் சாதியினரோ போடுகின்ற ஆர்ப்பரிப்புகள் யாவும், அவர்களெல்லாம் தத்தம் சாதி நலன்கள் கெடாமல் பார்த்துக் கொள்ள முயலும் கோலங்களாகவே இருக்கும்.

ஆனால் திராவிட இயக்கத்தைப் பார்த்துச் சலித்துக் கொள்ளவும் சாடவும் செய்கின்ற பார்ப்பனர்கள், அந்தத் திராவிட இயக்கம் ஒரு வரலாற்று எதிர்வினை (reaction) என்பதை மட்டும் மூடி மறைப்பானேன்? தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தோன்றிப் பின்னர் திராவிடக் கொள்கை வளர்த்தெடுக்கப்பட்டதற்கு முன்னால் பார்ப்பனர் அனைத்து நின்ற ஆரியக் கூத்தாடிய இறைநெறிக் கழகமே (Theosophical Society) தமிழகச் சூழலில் 'திராவிட'மென்னும் எதிருயிரியைத் (antibody) தோற்றுவித்தது என்னும் உண்மையை மறுப்பானேன்? பார்ப்பனர் கிணறு வெட்டப் போய் வந்

துற்ற பூதம் தானே அந்தத் திராவிட இயக்கம்? முகந் குற்றத்தைச் செய்ததே கர்னல் எச். எசு. ஆல்காட், பிளாவாட்சுக்கி அம்மையார் போன்ற அமெரிக்கர் தலைமையில் திரண்ட பார்ப்பனர் வட்டங்கள்தாமே? இதனால், எய்தவனை விட்டு அம்பை நோவானேன்?

ஆரியக் கொள்கைக்கு எதிராகத் திராவிடக் கொள்கையை வைத்துக்களம் கண்டபோது, சென்னை மாகாணம் என்னும் ஆங்கிலேயர் காலப் பண்ணுட்டின அரசு இருந்து வந்தது. 1956ஆம் ஆண்டில் அந்தத் தலைமாநிலத்தை மொழிவழியில் கூறுடிய போதே, அந்தத் திராவிடக் கொள்கை உண்மையில் செத்து விட்டது. தமிழரும், தெலுங்கரும், கன்னடரும், துளுவரும், குடகரும், தென்னகத்தின் வெவ்வேறு தேசிய இனங்களாக இருக்கின்ற உண்மையைத் திராவிடரென்னும் பெயரில் புதைத்து வைத்து இல்லாததை இட்டுக்கட்டிச் சொல்வதாகத் திராவிட அரசியல் இருந்தது. இந்தத் திராவிட உத்தியைப் பொதுவாகத் தெலுங்கர்தாம் நன்கு பயன்படுத்திக் கொண்டனர், தமிழ்ப்பார்ப்பனரின் மேட்டிமையை அகற்றச் சொல்லிக் கற்பித்த (அன்று சென்னை மாகாணத்திலிருந்த) ஆந்திரத் தெலுங்கர்களிடமிருந்து பாடம் பெற்ற தமிழ்நாட்டுத் தெலுங்கர்களே அந்தத் திராவிடக் கொள்கையின் வாயிலாகத் தங்களுடைய அரசியல் பொருளியல் நலன்களை நன்கு வளர்த்துக் கொண்டனர்.

திராவிட உத்தியின் வாயிலாகத் தமிழ் மண்ணில் ஆந்திரத் தெலுங்கர்களின் ஊடுருவல் பெருகி, பேரளவில் மளமளவென நிலபறிப்பு நிகழ்ந்தது. தமிழகத்தின் நிலபுலங்களெல்லாம் இரெட்டி, நாயுடு சாதித் தெலுங்கர்களின் கைக்கு மாறின. குடியேற்றம் (குடியாத்தம்) அருகிலுள்ள செஞ்சி மோட்டூரைப் பற்றித் தினமணி (13-10-1991) ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. இதை ஒரு மாதிரியாகக் கொண்டால், தமிழகத்தின் பல ஊர்களில் இதே கதைதான். செஞ்சி மோட்டூரில் நில உடைமைகள் யாவும் இரெட்டிகளுக்கும் நாயுடுகளுக்கும் சொந்தம். தொல்தமிழர்கள் (ஆதி திராவிடர்கள்) எல்லாம் இன்னும் இவர்களின் பண்ணை அடிமைகள்! பண்ணையடிமை முறை ஒழிந்தது இன்றும் பெயரளவுக்குத்தான்! கீழ்வெண்மணி முதல் செஞ்சி மோட்டூர்வரை சாதிக் கொடுமைகளும் தீண்டாமையும் இனறும் கொடிகட்டிப் பறப்பதும், கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதும் பொதுவாகத் தெலுங்கர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற தமிழக ஊர்ப்புறங்களில்தாம் என்பது ஒரு பொது உண்மை.

(தொடரும்)

# பறவைகள் மாநாடு!

—நாடக ஆக்கம் அதியமான்

**(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாவியக்கொத்தில் 4-ஆவது பாவியம்)**

**முன்னுரை :** இந்தியாவில் மொழிச்சிக்கல் ஏற்பட்டு ஏறத்தாழ அரை நூற்றாண்டாகியும், இதற்கொரு முடிவை இன்னும் கண்டிலர். வடவர் தமிழ்நாட்டை ஆள்வதால் அவர்களுடைய மொழி இந்தியை அனைவரையும் படிக்கச் சட்டத்தால் துன்புறுத்தி வருகின்றனர். இம்மொழிச் சிக்கல் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் உண்டு எனினும் தமிழ்நாட்டில் மட்டுமே இந்தியை முழுக்க முழுக்க வேண்டாமென்று சொல்லும் எதிர் உணர்ச்சி உள்ளது இதற்குக் கரணியம் யாதெனில் வடமாநில மொழிகள் யாவும் சமசுகிருதம், இந்தி ஆகிய மொழிகளின் கூட்டு மொழிகள். அதனால் அவர்களுக்குத் தங்கள் மொழியைப்பற்றி அவ்வளவாகக் கவலை இல்லை. மேலும் தமிழ்நாட்டில் எதிர்ப்பு கடுமையாக இருப்பதால், அதன் முடிவே நமக்கும் என்றும், வீணே ஏன் நடுவண் அரசை பகைத்துக்கொள்ள வேண்டும் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் ஏன் இந்தியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்றால், தமிழ் மொழியில் எல்லா வகையான இலக்கண இலக்கியங்கள், கலைச்சொற்கள், வேர்ச்சொற்கள் இருப்பதாலும், பிற மொழி ஏந்துகள் தேவை இல்லை என்பதாலும், தமிழில் பிறமொழிக் கலவைகள் ஏற்பட்டால் அதன் சீரிளமை கெட்டுப் பழகு தமிழ் பாழாய் விடும் என்னும் முகாமையான கரணியம் பற்றியும், தமிழில் பலமொழிகள் கலந்தமையால் மொழி உணர்வே தமிழர்களுக்கு இல்லாமல் போனது மட்டுமன்று, இனநலங்காக்கும் உணர்வும் மழுங்கிப்போய் விட்டது என்பதாலும் அதை ஏற்க மறுக்கிறார்கள். இந்நிலை இன்னும் நீடித்தால் தமிழனமே அழிந்து போகும் என்கின்ற அச்ச உணர்வால், தமிழ் நாட்டுத் தமிழறிஞர்கள் பிறமொழியாகிய இந்தியை ஏற்க மறுக்கின்றனர். உண்மையும் அதுவே. இந்தி மொழிதான் இந்தியாவின் அலுவல் மொழி என்பதற்கு வடவர்கூறும் ஒரே கரணியம், அம்மொழி மிகுதியான மக்களால் பேசப்படுகிறது; ஆகவே அதே 'அலுவல் மொழியாக இருத்தல் வேண்டும்' என்கின்றனர். இதுவும் பொய்யே, இந்தியில் அதன் தொடர்புள்ள மொழிகளைப் பேசும் மக்களைச் சேர்ந்தே எண்ணிக்கையைக் கூட்டிச் சொல்லுகின்றனர். ஆனால் இந்தி மொழி வளமற்ற மொழி என்பதை அவர்கள் வைத்திருக்கும் சட்டமே குறை கூறி உள்ளது.

இந்திய அரசியல் சட்டம் 343-(2)-(1)இன் படி இந்த அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பதினைந்து ஆண்டுகளுக்கு நடுவண் அரசின் அலுவல் மொழியாக ஆங்கிலமே தொடரவேண்டும், எனக் கூறுகிறது. இதன் உட்பொருள் இந்தி ஓர் அலுவல் மொழியாக வளர 15 ஆண்டுகளாகும். அதுவரைக்கும் ஆங்கிலமே நீடிக்கும்.

மேலும், இந்திய அரசியற் சட்டம் 351. ''பாரதத்தின் பலவகையான பண்பாடுகளை வெளிப்படுத்தக் கூடிய மொழியாக இந்தியை வளர்ச்சி பெறச்செய்ய இந்துசுத்தானி மொழியிலிருந்தும், சமற்கிருதத்திலிருந்தும், தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 15 மொழிகளிலிருந்தும் சொற்களை எடுத்தும் இந்தியை வளப்படுத்துவது நடுவணரசின் கடமையாகும்' எனக்கூறுகிறது. ஓர் அலுவல் மொழியாக இயங்கத் தகுதியற்ற மொழியாக இந்தி இருக்கிறது என்பதை இந்திய அரசியல் சட்டங்களே கூறுகின்றன. நேருவும், ''இந்தியாவில் இந்தியைக் காட்டிலும் வளமான மொழிகள் பல இருந்தும், இந்தி மொழியை ஏற்றுக்கொள்ளக் கரணியம் இந்திய ஆட்சி மொழியென்று இந்திய சட்டத்திலிருப்பதாலும், பெரும்பான்மை மக்களின் பயன்படு மொழியாக இருப்பதாலுமே'' எனக் கூறியுள்ளார். அம்மொழி 15 ஆண்டுகளில் வளம் பெற்று விடும் எனப் போட்ட வடவரின் கணக்கும் சரியற்றுப்போய் 44 ஆண்டுகளாகியும் அம்மொழி-இந்தி-இன்னும் அலுவல்மொழியின் தகுதியைப் பெற்றிலது. என்ருலும் ஆட்சி இந்தி பேசுவோரின் கையிலிருப்பதால் அவர்கள் மொழியைத் திணிக்க மேலும் முயன்று வருகின்றனர். அதன் வளர்ச்சிக்காகப் பலகோடி பணக்குவியலைச் செலவு செய்கின்றனர்.

இப்படிப்பட்ட ஆட்சியின் வல்லாளுமையை விளக்குவதற்காகவே 'பாவியக் கொத்'தில் 'பறவைகள் மாநாடு' என்ற ஒரு பாவியத் தலைப்பைப் பாவலரேறு அவர்கள் எழுதி இருக்கிருர்கள். மொழி அழிவைப் பறவைகள் கூட ஏற்றுக்கொள்வதில்லை என்பதை இப்பாவியம் நமக்கறிவுறுத்துகிறது. இதில் ஆட்சி செய்யும் கழுகு பல ஏமாற்றுதல்களை எடுத்தியம்பியும், பறவைகளில் பல ஏற்க மறுத்துவிட்டன. பல புனைவுகள் செய்யும் வௌவாலும், காக்கையும் தன்னுடைய அச்ச உணர்வையும் அடிமை எண்ணத்தையும் காட்டி நிற்கின்றன. அவையுங்கூடக் கழுகை இறுதியில் தனிமைப் படுத்திவிட்டு அகன்று விடுகின்றன. இப்படித்தான் தமிழ்நாட்டின் நிலைமையும் இருக்கிறது. இருக்குமெனக் கூறி மற்றவற்றை நாடகத்தில் விளத்தமாகக் கூறுகிறேன். பாவலரேறு அவர்கள் பாவியக்கொத்தின் ஒருமலராகிய ''பறவைகள் மாநாடு' என்பதை நாடகமாக்கி அனைவரும் மொழியுணர்வு பெறத் தருகிறேன்.

## காட்சி. க.

**உறுப்பினர்** : கழுகரசன், காவல்காக்கை, நாரை.
**இடம்** : பொதிகை மலையிலுள்ள ஓர் ஆலமரம்
**காலம்** : காலை
**நிலை** : மாநாட்டு விளம்பர அறிவிப்பு,

**கழுகு** : (அரசனிருக்கையிலமர்ந்து) யாரங்கே காவல்?
**காக்கை** : (சிறகடித்து) மன்ன நான்தான், காக்கை இருக்கிறேன்.
**கழுகு** : நீ போய், நாரையை அழைத்துவா.

காக்கை : ஆணை, மன்னு (போகிறது).

நாரை : (வந்து கழுகின் முன் நின்று) வணக்கம். மன்னு! வாழ்க உன்னுட்சி.

கழுகு : நீ போய் தெற்கே கன்னியாகுமரியிலிருந்து, கேரளம் வழியாகப் போகும்போது அங்கும், ஆந்திரம் சென்று பறை அறிவித்துவிட்டு, அப்படியே கன்னடஞ் சென்று அங்கேயும், கூர்ச்சரத்திலும் பறைசாற்று. அங்குப் பறையை உரக்க அடித்துவிட்டு, நான் சொல்லும் அறிவிப்பை அறிவித்துவிட்டு, விந்தியமலையைத் தாண்டிப் பறையைக் கொண்டு சென்று வடக்கே இமயம் வரை சென்று இந்தியாவில் வாழும் பறவைகளெல்லாம், இன்றிலிருந்து எட்டாவது நாள் பொதிகை மலையில் இப்போது நானிருக்கும் இந்த ஆலமரத்தில் கூடவேண்டும். இங்குப் பறவைகள் மாநாடு ஒன்று நடக்க இருக்கிறது. செய்தியை அறிவித்துவிட்டு விரைவாக வந்துசேர் (உரக்கக் குரலில்) புரிகிறதா?

நாரை : ஆணை மன்னு! எப்படி அடிப்பது என்று சொல்லுங்கள் அப்படியே சொல்லிப் பறையை அடிக்கிறேன்.

கழுகு : ஆமாம். அதைச் சொல்ல மறந்து போனேன். நாரையே நன்றுகக் கேள். அதாவது நான் சொல் வதை மறந்துவிடாமல் ஒரு சொல்லையும் மறந்து விடாமல் அடி பறை.

நாரை : அப்படியே செய்கிறேன் மன்னு.

கழுகு : ''இந்தக் காட்டாட்சியைக் கழுகரசன் ஏற்று ஒன்பது திங்கள் ஆகிவிட்டன. அவருக்கு முன்னுல் ஆண்ட அரசர்களைக் காட்டிலும் சிறப்பாக ஆண்டு கொண்டிருக்கிருர். நமக்கு விலங்குகளாலும், வேட்டையாடு பவர்களாலும் எவ்வகை இழப்புகளும் ஏற்படாதபடிக்கு அவர்களால் வரும் ஏதங்களை முறியடிக்க ஒற்றுமையாக நாம் அனைவரும் வாழ-ஒருமைப் பாட்டுக்காக்-வழங்க இருக்கும் திட்டத்தை அறிவிக்க இருக்கிருர். அதனுல் எல்லாப் பறவை இனங்களும் இன்றிலிருந்து எட்டாவது நாளில் பொதிகை மலையின் நடுவிலிருக்கும் பெரிய ஆலமரத்தில் கூடுமாறு ஆணையிட்டழைக்கிருர். அங்குப் பறவைகள் மாநாடு ஒன்று நடக்கும். அனைவரும் தவருமல் கலந்துகொள்ள வேண்டுகிருர். இது கழுகரசனின் ஆணை' என்று பறை அடித்துச் செய்தியை அறிவித்துவிட்டு வந்து சேர்.

நாரை : என்ன திட்டமென்று ஏதும் கேட்டால்?

**கழுகு** : சீ! அதை எது கேட்கும்? அப்படிப்பட்டதுகள் இங்கு எதுவும் கிடையாது. திட்டத்தை நான் பின்னால் அறிவிப்பேன். உனக்கு ஏன் அந்த வேலை? நீ போய் நான் சொன்னபடி பறையை வலுவாக அடித்து நான் சொன்னபடி சொல். வேறு எதுவும் எனக்குத் தெரியாது என்று கூறிவிட்டு, என் ஆணையை ஏற்று எல்லாப் பறவைகளும் வந்து சேரக் கூறிவிட்டு ஒடி வந்து விடு, போ.


**நாரை** : சரி மன்னா ஆணை (பறக்கிறது).

**கழுகு** : ஏய்! பொறு பொறு; இதைக்கேள்; நீ எங்கேயும் தங்கி எந்தப் பறவையிடமும் எதையும் பேசிவிடாதே. உனக்குப் பேசத் தெரியாது. உளறி விட்டுச் செயலைக் குழப்பிவிடாதே. பறையை அடி, செய்தியைக் கூறி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றுவிடு. எந்தப் பறவையிடமும வேறெதுவும் சொல்லக் கூடாது. நினைவில் வைத்துக்கொள். (திரை)

(தொடரும்)

### தூய தமிழ்த் தொண்டர்

# கோபி அரசு மறைவு!



'தென்மொழி' தொடங்கிய நாளிலிருந்து தம் இறுதி நாள் வரை அதன் வளர்ச்சிக்குத் துணையாய் நின்ற தூய தமிழ்த் தொண்டரும், நமமேல் கள்ளம் கவடில்லாத மெய்யன்பு கொண்டவரும், நம்மின் கடும் தொண்டுழைப்புக்கு அவ்வப் பொழுது அருந்துணை நின்ற வரும், சலியாத, சளைக்காத கல்வி உழைப்பாளரும் ஆகிய நம் அருமை இளவல், கோபி பாளையம் புலவர். மா அரசு இலக். இ. கல். இ. அவர்கள் தடு மெனக் கடந்த 1-11-1991 அன்று தம் 52-ஆம். அகவையில் மறைவுற்றார்கள்.

அவர் மறைவு **தென்மொழிக்கும்** நமக்கும் பேரிழப்பும் பெருந்துயரும் தருவதாகும். அவரைப் பிரிந்து வாடும் அவர் தம் அருந்துணைவியார்க்கும், அருமை மக்கட் செல்வங்களுக்கும் கெழுதகை நட்புக்கும் உறவுக்கும், அவர் ஆசிரியராக நின்று பயிற்றுவித்த, வளர்த்தெடுத்த மாணவ நெஞ்சங்கட்கும் நம் இரங்கலும் ஆறுதலும் உரிய வாகுக! அவர் புகழ் நீடு வாழ்க!

— ஆசிரியர்

# சாலை தீட்டாகிவிட்டது!

முனைவர். அ. சேப்பன்

ஒரு நாள் நானும் என் பெரியம்மாள் மகன் கலிதீர்த்தான் என்பவரும் கடினவயல் என்ற கம்மத்திற்கு (சிற்றூர்க்கு) உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றுவிட்டுத் திருமபி வந்து கொண்டிருந்தோம்.

இருவரும் பேசிக்கொண்டே வந்தோம். எதிரே ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரை நாங்கள் தொட்டுவிடவில்லை என்பது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. கொஞ்சம் அருகில் நெருங்குவது போல் வந்துவிட்டோம். அவ்வளவுதான்! எதிரே வந்தவர் உயர் சாதிக்காரர். அவரைவிட நாங்கள் அழகான ஆடைகள அணிந்திருந்தோம்.

"டேய் பசங்களா! யாருடா நீங்க?" என்றார். நாங்கள் அஞ்சி போனோம். எந்த ஊர். என்ன சாதி என கேள்விகள் எழுந்தன ஊர்ப் பெயரை உண்மையாகச் சொன்னோம் ஆனால், சாதியை மாற்றி உயர்ந்த சாதிப் பெயரைச் சொல்லிவிட்டோம.

"என்னடா பறப்பசங்களா—நீங்கள் சேரியிலே நடந்த கல்யாணத்திற்குப் போய்விட்டு வர்றீங்க—இங்க சாதியை மாற்றிப் பொய் சொல்லுறீங்க-" என்று கத்தினார். நாங்கள் நன்றாக மாட்டிக் கொண்டோம.

எங்கள் இருவரையும் அவ்வூர் நிலக்கிழார் (ஜமீன்தார்) வீட்டிற்குக் கொண்டு சென்று கட்டிப் போட்டு ஊசி குததுவதாக மிரட்டினார்.

நாங்கள் கெஞ்சினோம். ஆனால், அவரோ "பறப்பசங்க நடப்பதால் இந்த 'ரோடே' தீட்டாகிவிட்டது - எங்கேயாவது வயல்காடு வழியாகப் போவதுதானே" எனக் குற்றம் சாட்டினர்.

நாங்கள் சாலை வழியாக வந்து சாலையைத் தீட்டாக்கியது 'முதல் குற்றம்'. அவரைத் தொடுவது போல் அருகில சென்றது 'இரண்டாவது குற்றம'.

இதற்குத் தண்டனையாகக் காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம போடச் செய்தார் பிறகு ஏறத்தாழ இரண்டு அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) தூரத்திற்கு அப்பாலுள்ள 'சனி'ச் சந்தையடி வரை திருமபிப் பார்க்காமல் ஓட வேண்டுமெனக் கட்டளையிட்டார்.

'எப்படியோ பிழைத்தோம்' என இருவரும் இரண்டு அ மா. (கிலோ மீட்டர்) தூரம் மூச்சுத் திணற ஓடிச் சந்தையடியில் விழுந்தோம். நீண்ட நேரம பேசவே முடியாமல் திணறிக்கொண்டு

பிறகு, ஒரு வழியாக எழுந்து எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

என் பெரியம்மான் மகன் ஓரளவு படித்தவர். அவருக்கு அந்த நேரத்தில் ஏற்பட்ட மனத் துயரத்திற்கு அளவே இல்லை.

ஆனால், நிலக்கிழார் வீட்டிற்குக் கொண்டு சென்று ஊசி ஏற்றப்படுவதிலிருந்து தப்பித்து வந்தது எங்களுக்கு நல்லநேரம் என்றே பேசிக் கொண்டோம்.

ஊசி ஏற்றுவது என்றால்—ஏதோ மருத்துவர்கள் ஊசி போடுவது போன்று அன்று பிரிவு (செடியூல்டு) இனத்தவர்களின் இரண்டு கைகளையும் பின்புறமாகச் சேர்த்துக் கட்டி விடுவார்கள். பிறகு, ஒரு மரத்தில் இணைத்துக் கட்டுவார்கள். இசைத்தட்டு (கிராமபோனு)க்குப் பயன்படுத்தும் ஊசிகளைக் கொண்டு ஒவ்வொரு விரல் உகிரின் (நகத்தின்( இடுக்கு வழியாகக் குத்துவார்கள். இது மிகவும் கொடுமையான உறுப்புச் சிதைவு (சித்திரவதை). அந்தக் கொடுமையிலிருந்து எப்படியோ தப்பினோம்.

அன்று என் அண்ணன் கலங்கியபடி, ''தம்பி' இந்தச் சாதி வெறி பிடித்தவர்களின் நடுவில் நாம் வாழவே கூடாது. இந்தச் சாவக் கேடான நாட்டில் நாம் சாகவும் கூடாது. நாம் சிங்கப்பூருக்குப் போய் விடலாம். முதலில் நான் சிங்கப்பூருக்குப் போய் விடுகிறேன். பிறகு, நீ பெரியவனாகியதும் உன்னையும் சிங்கப்பூருக்கு அழைத்துக் கொள்கின்றேன். நாம இருவரும் சிங்கப்பூரிலேயே வாழ்நது - அங்கேயே செத்துவிடலாம். கொடியவர்கள் வாழும் நாட்டில் தீவாய்ப்பாக (துரதிர்ஷ்டவசமாக)ப் பிறந்து விட்டோம். ஆனால், 'நரக' உலகத்திற்குச் சமமான இந்த நாட்டில் நாம் சாகக் கூடாது'' என சூளுரை (சபதம்) செய்தார்.

அவர் சில மாதங்களில் சிங்கப்பூர் சென்றுவிட்டார். அதற்குப் பிறகு என் அன்பு அண்ணன் திரும்பி வரவில்லை.

அவர் சூளுரை (சபதம்) செய்து கொண்டபடி சிங்கப்பூரிலேயே இறந்து விட்டார். செய்தி அறிந்து பெரிதும் வருந்தினோம், கண்ணீர் விட்டோம், ஆனால் ''சாதி வெறி பிடித்தவர்கள் வாழும் இந்தியாவில் சாகக் கூடாது-சாக மாட்டேன'' எனச் சூளுரையேற்ற எங்கள் அருமை அண்ணன் சிங்கப்பூரிலேயே அமைதியடைநது விட்டார்.

அந்த அன்பு அண்ணனின் ஒரே மகன் ''மதிவாணன்'' என்பவர் இப்பொழுது அப்துல் சமதாக மாறி இசுலாம மதத்தை ஏற்றுக் குமுகாய விடுதலை பெற்றுள்ளார்.

['விடுதலை பெறத் துடிப்பது ஏன்?' நூலில் இருந்து]

—நன்றி : 'சமரசம், நவம். 16-30, 91

# உரைப்பதெலாம் உரைப்பாவோ?

—முனைவர். **கடலூர் மணிமாறன்**

'புதுக்கவிதை' எனும்பெயரில் தமிழ்க்கழனி தன்னில்
புதியதொரு களையினையே புகுந்திவரும் நண்பீர்!
புதுமையினைப் படைக்கின்ற பாத்திறமும் உங்கள்
புலம்பலிலே காணோமே! பொருளுணர்த்தும் நோக்கம்
ஏதுமின்றி எதையெதையோ கிறுக்கிவரும் நீங்கள்
இலக்கியத்தில் புதுநஞ்சைப் பாய்ச்சுகின்றீர்! வீணே
மதுகுடித்த வண்டெனவே மயக்குற்றே ஏனோ
மனம்போன போக்கெல்லாம் எழுதிவரு கின்றீர்?

இலக்கணத்தில் அரிச்சுவடி அறிவீரா? பாடல்
எழுதுவதைப் பொழுதுபோக்காய்க் கொண்டீர்கள் போலும்!
இலக்கியமாம் ஆழ்கடலுள் மூழ்கிமுத்துக் காணும்
எண்ணமின்றிக் கலக்கவந்த எருமைகளாய் ஆனீர்!
நலம்சேர்க்கும் நாட்டமின்றி நற்றமிழ்க்கு நாளும்
நலிவுகளை இழிவுகளை நயந்துமிகச் செய்தே
விலக்கரிய கீழ்மைகளை விருப்பமுடன் போற்றி
வெற்றார்ப்பில் விளம்பரத்தில் விதிர்விதிர்க்க லானீர்!

உண்டதையே வாய்வழியே உமிழ்ந்திடுவார் போலும்
உளறல்களை உயர்கருத்தாய் நிலைநாட்ட வந்தீர்!
துண்டொன்றை வேட்டியெனத் துணிவாகக் கூறித்
துளியினையே வெள்ளமெனக் காட்டமுயல் கின்றீர்!
சுண்டைக்காய் ஒருபோதும் சுரைக்காயாய் ஆமோ?
சுடரின்முன் மின்மினிகள் தலைதூக்கல் ஏது?
மண்பாவை தனைமணக்க மனத்துணிவு கொண்டீர்;
மல்லிகைமுன் கள்ளிப்பூ மதிப்புறுதல் உண்டோ?

காரிகையர் உடலசைவைக் கழிமகிழ்வாய்ப் பாடும்
கருத்துடைய நீங்களெலாம இனியேனும் யாப்புக்
காரிகையைப் படிப்பீரேல் பாட்டெழுதும் பாங்கைக்
கற்றிடலாம்! களங்கத்தைக் களைந்திடலாம்! போற்றும்
சீரிளமைத் திறம்வாய்ந்த செந்தமிழ்நூல கற்றே
சிறப்புறுவீர்! பொறுப்புணர்வீர்! சிறியவராய் நாளும்
பேரிகையின் முழக்கமிட்டுப் பிதற்றல்களைக் கொட்டிப்
பேரவலம் கொள்ளாதீர்! பெருமைகளைக் காப்பீர்!

மத்தாப்புச் சிந்துகின்ற ஒளியெல்லாம் என்றும்
மலர்ந்துவரும் நிலவொளிக்கே ஈடாவ துண்டோ?
பித்தர்களின் உரையாவும் அறிவுரைகள் ஆமோ?
பிழைகளையே ஊக்குவிக்கும் பேதைமையும் நன்றோ?

முத்தான தமிழ்ப்பாடல் ஒன்றிரண்டு தீட்டி
முத்தமிழ்க்குத் தொண்டாற்றி முனைந்திடுவீர்! நல்ல
கொத்துமலர்க் குவியல்கள்முன் குப்பைகளைக் காட்டும்
குறைகுடமாய் அமையாதீர்! நிறைபுலமை கொள்வீர்!

கம்பர்களாய் கதைக்கின்றீர்! கற்பனையும் ஆன்ற
கருத்துகளும் பாட்டொழுங்கும் இல்லாமற் பாடிக்
கொம்பர்களாய்க் குதிக்கின்றீர்! சீரடிகள் தம்மைக்
குறைக்கின்றீர்! வளைக்கின்றீர்! நெளிக்கின்றீர்! கூறின்
வம்புசெயத் துடிக்கின்றீர்! பாட்டரங்கம் ஏறி
வாய்நீளம் காட்டுகின்றீர்! வல்லவராம் மற்றோர்
நம்புகின்ற வகையினிலே உரைவீச்சை நீவிர்
நாடகமாய் அரங்கேற்றி நகுவதிலே தேர்ந்தீர்!

அரைகுறையாம் ஆக்கியதை அறுசுவையும் நல்கும்
அடிசிலெனில் ஒப்புவரோ? அலைபாயும் நெஞ்சீர்,
நரைவிழுந்து திரைபடர்ந்து நலிவுற்ற கிழவி
நறுமலரைச் சூடுவதால் நங்கையெனல் ஆமோ?
வரையாடும் இளமானை வந்திழித்தாற் போல்
வல்லினமும் மெல்லினமும் அறியாத நீங்கள்
உரைப்பதெல்லாம் உரைப்பாவோ? உணர்ந்திடுக இன்றே!
உவப்பான பாவியற்றி உலாவருக நன்றே!

# ஆண் பெண் கரு அணுக்கள்!

உயிர் அணுக்கள் (குரோமோசோம்—Chrosomes) x. y என்று இருவகையாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் x உயிரணுக்கள் 46 xx ஆக இருப்பின், அவ்வுடல் பெண் ஆகப் பிறக்கிறது. அவை 46 xy ஆக இருப்பின் அவ்வுடல் ஆண் ஆகப் பிறக்கிறது. இவற்றுள் பெண்ணாகப் பிறப்பதற்கு உதவும் x உயிரணுக்கள் கருமுட்டை (அண்டம்) என்று தமிழில் வழங்குகிறது இக் கருமுட்டைகள் ஒரு பெண்ணின் கருவிடத்தில் (Ovary) உருவாகிப் பெண் குழந்தை பிறக்கும்போதே உள்ளன. ஆண் உயிரணுக்கள் சினையணுக்கள் எனப் பெறும். இவையும் ஆண் குழந்தை பிறக்கும்போதே உருவாகி ஆணின் விதைப் பைகளில் உள்ளன. இக் கருவணுக்கள், சினையணுக்கள் அல்லாமல், ஆண், பெண் உருவங்களின் புறவுறுப்புகளை உருவாக்கும் உடலுயிர் அணுக்கள் (Haemophrotesin) என்பவையும் சேர்ந்தே உடல் உருவாகிறது. □

அண்ணாவும், பெரியாரும் இருந்திருந்தால் இவையெல்லாம் தாங்க நெஞ்சுரமின்றித் தூக்கில் தொங்கியிருப்பர். இதையெல்லாம் கண்ணுறும் போது இனி வருங்காலத்தில் ''தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்பது நிலைக்குமா என ஐயுறுகிறேன். இவ் வையம் நீங்க வேண்டுமெனில் தங்களைப் போன்ற இனமான உணர்வுமிக்கோர் பின் அணிவகுத்தலே சாலச் சிறந்தது.
இவண், —ச. இளமதி, பங்காருபேட்டை.

O: 1473: அன்புமிக்க ஐயா வணக்கம். தென்மொழியைப் படித்துத் தங்களுடைய வாழ்வை வளமாக்கிக் கொண்டனரே தவிர தங்களுடைய பணிக்கு உதவும் வகையில் உங்களுக்குத் துணையாகத் தென்மொழி அன்பர்கள் இல்லை. அதை நினைக்கும் போதுதான் மிக வருத்தமாக உள்ளது. இதழ்களைப் படிப்பவர்கள் யாவரும் நினைத்தால் அதனைப் பரப்பிச் சிறந்த பணியைச் செய்யலாம். இந்நாள் வரை அப்படி யாரும் செய்யவில்லை; செய்திருந்தால் இதற்குள் அச்சகம் எவ்வளவோ முன்னேறி இருக்கும். உயர் மட்டத்தினர் இதழ்களைப் படித்ததால் கழகத்திற்கு எப்பயனையும் தரவில்லை; இனி, சிற்றூர் பகுதி மக்கள் தாம் உண்மையாக உழைக்கும் மக்களாக இருப்பார்கள்... உங்கள் அருமையான கருத்துகளை இந்நாள் வரை பாராமல் இருந்த தொண்டர்களை எண்ணிக் கவலைதான். உங்களுடைய கருத்துகள் மக்களிடம் போகவில்லை என்றால் இது போன்ற கருத்துகளை யார் சொல்லப் போகிறார்கள்? எனவே ஆசிரியர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் அரசு ஊழியர்கள், அடித்தள மக்கள் போன்றோர் சிக்கல்களை ஆய்ந்து, 'தமிழ்நில'த்தில் வெளியிட வேண்டுகிறேன். அச்சகப் பணி ஆளில்லாமல் முடங்குகிறதே என்று கவலை கொள்கிறேன்.
தங்கள் அன்புள்ள, —அதியமான், தாழையூற்று.

O: 1474: பெருந்தகையீர், நல்வணக்கம். தோழர்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு படித்துவிட்டு எப்படித்தான் இதைப் பாராட்டுவதென்றே புரியவில்லையெனக் கூறுகின்றனர். இதைப் போற்ற நமக்குத் தகுதியில்லை என்றும் கூறுகின்றனர். இருப்பினும் இக்கருத்தை ஒவ்வொருவரும் ஆழ்ந்து படித்து மற்றவர்களுக்கும் விளக்குகிறார்கள். உங்களின் பணி தொடர்க! துணையிருப்போம். உறுதி! தோழமையுடன், மாணவன், —நற்றேவன். ஏ.
பனப்பாக்கம்.

O: 1475: புதிய புறநானூற்றுப் புலவரேறே, வணக்கம்; வாழி. கன்னித் தமிழ் நாட்டின் மண்ணில் எண்ணற்ற ஏடுகள் காசுக்கு மானத்தை விற்று வளர்கையில்—வாழ்க்கையில்—, இனமானத் தலைவர்கள் இன்று இனத்தையே காட்டிக் கொடுக்கையில், அஞ்சாநெஞ்சினன் என்ற பட்டம் தாங்கிய கோழிக்குஞ்சு நெஞ்சினன்கள் எல்லாம் எண்ணவும் துணிவு கொள்ளாது ''பிறப்பின் மேல் ஐயம், பெற்றவர் மேல் ஐயம்'' என்று எண்ணுமளவுக்குக் கோழைக் கூட்டத்தினராக அலைகையில், ''கெடுக சிந்தை, கடிது இவள் துணிவே, மூதின் மகளிர் ஆதல் தகுமே—செருமுக நோக்கிச் செல்க, என விடுமே'' என்ற புறநானூற்றுப் பாடலைக் காணும் பொழுது, அனைத்துத் 'தமிழர்க்கும் தலைவனாய் நின்றான்' என்ற தென்மொழியின்—என் கண்மணியின்—இதழின் பாடல் என் நெஞ்சைக் குளிர்வித்தது. இறைவன் மேல் நம்பிக்கையற்றவன் நான். ஆனால் ''முண்டையின் மகனே'' என்ற பாடலைக் காணும் பொழுது—இறைத்தன்மையுடன் இயங்கிய அந்த இனிய அரிய அருமையான பாடலைக் காணும் பொழுது,—என்ன நினைப்பது என்றே புரியவில்லை. ''இறை நானூறு'' பாடலில் இடம் பெறத்தக்க பாடல் அது என்றே எண்ணுகின்றேன். வியக்கத்தக்கப் பாடல் அது; அதினினும் அதன் விளக்கம் (தென்மொழி

சுவடி:26ஓலை:3) மாந்தரின் உள்ளத்தையே கலக்கி விட்டது என்று சொன்னால், அது பொய்யன்று; 'கேடி'களும் பேடிகளும் நிறைந்த இந்த மண்ணில் கேடுகெட்ட பல ஏடுகள் ''கொலைகாரி'' என்று தமிழ் மறத்தி தானுவை நினைத்த பொழுது அம் மாதினை (தாங்கள்) ''தமிழ் வீரப் பெண்'' என்று புகழ்ந்தது கண்டு தமிழ் அன்னை பூரிப்பாள்! சற்றிலோர் ஓர் ஐயம்! உண்மையில் ஒரு மாந்தப்பிறவி தானா, நீங்கள்!? —அருள்மணி; வெங்காலூர்-15

○: *1476:* எங்களின் அறிவாசான் பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்! இராசீவ் எனும் முண்டையின் மகனின் அவச் சாவை அந்தக் கருக்கல் பொழுதிலே கேட்டவுடனே அக மகிழ்ந்தோம். தமிழ் (தாங்கள்) இட்ட சாவம் தான் அன்று முழுதும் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருந்தது; தென்மொழி சுவடி 26, ஓலை 3 இதழைக் கண்ணுற்ற பின்தான் சாவின் ஒவ்வொரு நிகழ்வும் இயற்கையாய் விளைந்த தமிழால், தமிழ் இட்ட சாவத்தை ஒரெழுத்துக் கூட மாறாமல் நிறைவேற்றித் தமிழின் பெருமையை நிலைநாட்டியுள்ளது. தமிழினத்தை அழிக்க முற்படுபவனை தமிழே அழித்து விடும் என்பதுவும் நிலைநாட்டப் பட்டுள்ளது; தமிழருக்குத் தமிழே உயிராய் இருப்பதால், தமிழை உணர்ந்தவர்கள் அனைத்தையும் உணர்ந்தவராவார்கள்; தாங்கள் தமிழ் இன நலம் காக்க வேண்டி இன்னும் ஆயிரம் ஆண்டுகள் வாழவேண்டும். வாழ்ந்து வழிகாட்ட வேண்டுமென்று விரும்புகிறோம். எத்தனை ஆயிரம் ஆண்டுகள் என்றுதான் சொல்லத் தெரியவில்லை; ! — சு.திருவாணன், சென்னை-103

○: *1477:* பேரன்பின் பெருந்தகை அய்யா பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு! வணக்கம். தென்மொழி(சு 26: ஓ 3.)கண்டேன் அய்யா! தங்களை என்னவென்று சொல்வது? நான் ஒரு நாத்திகன்; இல்லையென்றால் உங்களை ஒரு தெய்வப்பிறவியென்றே சொல்லியிருப்பேன்; நான் தென்மொழி உறுப்பினன்; என்னிடம் இதழ் வாங்கிப் படிக்கும் அன்பர்கள் எல்லாம் தங்களைப் புகழாத சொற்களே இல்லை. அய்யா, தாங்கள் இக்காலத் திருவள்ளுவர்! அய்யா, ராசீவிற்கு ஓர் அறப்பாடல் பாடினீர்கள்! நல்லபடியாக நடந்து முடிந்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தோம், அனைவரும்! அய்யா, அய்யங்கார் அம்மையாரைப் பற்றி ஓர் அறப்பாடல் எப்பொழுது பாடுவீர்கள்? உடனடியாக அறப்பாடல் எழுதுங்கள்; தமிழின எதிரி தமிழினத்தைக் கருவறுக்கும்—கருவறுக்கவிருக்கும் ஆட்சியையும் அம்மையாரையும் வீழ்த்தும் படியாக; எழுதுங்கள், அய்யா! நான் ஒரு பெரியார் தொண்டன்; இனி நீங்கள் எனக்குக் குரு, தலைவர்-எல்லாம்! -முருகேசன்,சு. பனப்பாக்கம்;

○: *1478:* அய்யா! இந்திராவை 'விதவை' என்றோ 'முண்டை' என்றோ எழுதுவது சரியில்லை. 'விதவை, என்றோ 'விதவைக்' கோலமோ மற்ற நாடுகளில் இல்லை; முண்டை மகன் என்பதும் சரியாகப் படவில்லை;

வீரமணி பாப்பாத்தியைத் தான் வளைத்து விட்டார்; இவர் வளையவில்லை. நம்முடை உடன் பிறந்தவர்கள் (சகோதர சகோதரிகள்) ஒப்போலை(வாக்கு)கள் பெற்றுத் தானே செல்வியால் வர முடிந்தது: நம்மிடையே ஒற்றுமை உணர்வில்லை. பிளவு, பிரிவு ஏராளம்; வீரமணியின் விளக்கமும் தி.க. தீர்மானங்களும் உங்களைத் தெளிய வைக்கட்டும். —வா.ரா.சண்முகம், திருப்பத்தூர்;

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)